விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 163 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 17 புதன்கிழமை (31.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## சென்னை சம்பியன்



4 பக்கம் பார்க்க

## விபத்துக்களைத் தடுக்க யாழில் விசேட திட்டம்

6 பக்கம் பார்க்க

## கருத்துச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகின்றது

சர்வதேச மன்னிப்புச் சபை

3 பக்கம் பார்க்க

### பொதுப் போக்குவரத்து சேவைகள்

# எதிர்வரும் 3 மாதங்களுக்குள் டிஜிட்டல் மயமாக்கப்படும்

### அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

பொதுப் போக்குவரத்து சேவைகள் எதிர் வரும் 3 மாதங்களுக்குள் டிஜிட்டல் மய மாக்கப்படும்.

அதற்கமைய பல்வேறு உலக நாடுகளில் காணப்படுவதைப் போன்று கியூ.ஆர்.அட்டை மூலம்பொதுப்போக்குவரத்துக் களில் கட்டண அறவீட்டு முறைமை அறிமுகப்படுத்தப் படும் என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த் தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது 15

### இலங்கையின் அபிவிருத்திக்கு

# சீனா எப்போதும் துணை நிற்கும்

### பிரதமரிடம் சீன வெளிவிவகார பிரதி அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா எப்போதும் துணை நிற்கும் என சீன வெளிவிவகார பிரதி அமைச்சர், பிரதமர் தினேஸ் குணவர்த்தனவிடம் தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## வடமராட்சி இளைஞன்

நீரில் மூழ்கி உயிரிழப்பு



15

## வடக்கில் வெப்பமான காலநிலை

தொடர்பில் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வெப்பமான காலநிலை குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி வடக்கு, 15

## பொருளாதார அபிவிருத்திக்கான ஒத்துழைப்பை வழங்குங்கள்

### சீனப் பிரதி வெளிவிவகார அமைச்சரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

இலங்கையின் பொருளா தார அபிவிருத்திக் குத் தேவையான ஒத் 15



## காட்டு யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு

### மதவாச்சியில் சம்பவம்

(வவுனியா)

மதவாச்சி பிரதேச செய லக பிரிவிற்குட்பட்ட குடா ஹல மில்லேவ கிராமத் தினை சேர்ந்த விவசாயி ஒரு வர் காட்டு யானையின் தாக் குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நிலை 15

## சுதுமலை அம்மன் ஆலய வளாகத்தில் ஆர்ப்பாட்டம்



15

## சுற்றுலாத் துறையை மேம்படுத்த ரஜினியை நாடியது இலங்கை

(சென்னை)

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்த தென்னிந்திய நடிகரான ரஜினிகாந்தின் உதவியை இலங்கை நாடியுள்ளது.

தென்னிந்தியாவைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற நடிகரான ரஜினிகாந்தை இலங் 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1990 . 10 . 09

மறைவு 2023 . 03 . 04

## செல்வி சூரியகுமாரன் வாசுகி

(யா/ உடுவில் மகளிர் கல்லூரி, யா/ கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மாணவி

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

2023.03.04 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்பு மகளின் 90 ஆம் நினைவுநாள் 01.06.2023 அன்று எமது இல்லத்தில் நடைபெற்று கீரிமலையில் அஸ்தி கரைக்கப்படும் இதன் பின் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ள வேண்டுகிறோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு வேண்டுகிறோம்.

வளர்மதி,
கரவெட்டி கிழக்கு.
077 028 2895

(C-6648)

தகவல்:
திரு.திருமதி ஆ.சூரியகுமாரன்
சகோதரி சூ.அகிலா

# யாழ்.ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் குறித்த கூட்டம் ஆரம்பமாகும் என யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.(மு-7)

# மரண அறிவித்தல்

## சரஸ்வதி துரைராஜா



மானிப்பாய் தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த சரஸ்வதி துரைராஜா அவர்கள் நேற்று முன்தினம் (29.05.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராஜாவின் அன்பு மனைவியும் து.கணேசலிங்கம் (மின் பொறியியலாளர்), து.டக்ஷாயினி(முன்னாள் உத்தியோகத்தர் save the children), து.சிவலிங்கம்(தபால் ஊழியர் மானிப்பாய்), வ.சிவராஜினி (ஆசிரியை-யா/ மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் க.சத்தியபாமா, த.வரதன்(ஆசிரியர்-யா/ மாதகல் சென்யோசப் மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும் க.பிரணவன், க.விதுஷனா, வ.தரணீகரன், வ.நிருஷிகன், வ.நிதுர்ஷாஜினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் (29.05.2023) திங்கட்கிழமை நண்பகல் 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

(15785)

தகவல்-
குடும்பத்தினர்
077 492 8729

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 17 . 09 . 1944

ஆண்டவன் அடியில் 2022 . 06 . 11

## அமரர் கணபதிப்பிள்ளை முத்துக்குமாரு

(முன்னாள் யாழ் ப.நோ.கூ.ச. கிளை முகாமையாளர்)

திதி :31.05.2023

நேர்மையின் சிகரமாய்
நேரில் வந்த தெய்வம் - அப்பா
கஸ்ரப்பட்டு எம்மை வளர்த்தீர்கள்
கண்ணுக்குள்ளே காத்து வளர்த்தீர்கள்
பட்டப்படிப்பு நாமும் படிக்க
பக்கத்திலே நீங்கள் இருந்து
இராப்பகலாய் காவல் இருப்பீர்கள்
பட்டதாரி ஆகி பட்டம் பல பெற்றோம் - இனி
பட்டம் வாங்க மனசோ இல்லை
பரிதவித்துப் போனோம் - அப்பா
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது உம் நினைவுகள் - உங்கள்
ஆசீர்வாதத்தால் என்றும்
அவனியிலே வாழ்கின்றோம்

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமகன்
பேரன், ரிஜான்

ஏழாலை கிழக்கு, ஏழாலை.
077 443 5170

(15784)

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 02.05.2023 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் திருமதி துரைராசா கௌரி

(ஓய்வு பெற்ற ஆசிரியை – யா/ நெல்லியடி மத்திய கல்லூரி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (01.06.2023) வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும். அந் நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரீ முருக நிவாச,
கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.
077 833 0008/ 077 893 8217

(C-6647)

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் குரல் எழுப்புவதை அரசியல் உரிமைச் சட்டம் மூலம் தடுக்கும் அரசு

## மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சட்டத்தரணி சுவஸ்திக்கா

(கொழும்பு)

**ஒரு நகைச்சுவை கலைஞரை சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைச் சட்டத்தின் கீழ் கைது செய்யும் அரசாங்கம் வடக்கு கிழக்கில் பௌத்த ஆக்கிரமிப்புக்களை செய்வோருக்கு எதிராக இச்சட்டத்தைப் பயன்படுத்தாதது ஏன்? என பிரபல சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான அருளிங்கம் சுவஸ்திக்கா கேள்வி எழுப்பியுள்ளார்.**

காலி முகத்திடலில் போராட்டகாரர்களால் கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில், அண்மையில் கொழும்பில் உள்ள பிரதான பாடசாலை ஒன்றில் நடைபெற்ற நகைச்சுவை நிகழ்ச்சியில் பௌத்த மதத்திற்கு எதிராக சில சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்ட நடாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டு எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பௌத்த பாடசாலைகள் குறித்தும் அவர் பொதுவெளியில் கடுமையாக விமர்சித்தார். என இலஞ்சம், ஊழல் மற்றும் வீண்விரயத்திற்கு எதிரான குடியுரிமை அமைப்பு பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்ததற்கு அமைய குறித்த யுவதி கைது செய்யப்பட்டார்.

மேலும், இவர் அரசியல் உரிமை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டார்.

இச்சட்டம் தொடர்ந்து சிறுபான்மை மக்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்படுகிறது. இச்சட்டத்தின் கீழ் பல சிறுபான்மை இனத்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால், எந்தவொரு அரசாங்கமும் மக்களை பாதுகாப்பதற்காக அரசியல் உரிமை சட்டத்தின் 3ஆவது பிரிவை பயன்படுத்தியதில்லை.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் நடைபெறும் இந்து, இஸ்லாமியர்களுக்கு எதிரான பௌத்த ஆக்கிரமிப்புக்களை செய்பவர்கள் எவரும் இச்சட்டத்தின் கீழ் இதுவரையில் கைது செய்யப்பட்டதில்லை.

இன, மதங்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தவே அரசாங்கத்தின் முயல்கிறது. அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் குரல் கொடுப்பதை திசைத் திருப்ப இச் சட்டத்தை பயன்படுத்துகின்றனர் என அவர் தெரிவித்தார். (நி)

# சீன வெளிவிவகார பிரதி அமைச்சர் இலங்கை வருகை

(கொழும்பு)

சீன வெளிவிவகார பிரதி அமைச்சர் சன் வெய்டாங் இலங்கையை வந்தடைந்துள்ளார். இவர் இலங்கையின் வெளிவிவகார செயலாளருடன் இரு நாடுகளுக்கும் இடையிலான 12 ஆவது சுற்று இராஜதந்திர ஆலோசனைகளுக்கு இணைத் தலைமை தாங்குவதற்காகவே இலங்கை வந்துள்ளார்.

இந்த ஆலோசனைகள் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ள நிலையில் நாளை முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இரு நாடுகளும் அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாசார ஒத்துழைப்பை உள்ளடக்கிய இருதரப்பு உறவுகளின் நிலையை மதிப்பிடுவதற்கு இந்த கலந்துரையாடல் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# சட்டவிரோதமாக கனடா செல்ல முயன்ற 10 இலங்கையர்கள் டில்லியில் கைது

(டில்லி)

இந்திய குடிவரவு, குடியகல்வு துறையினரை ஏமாற்றி விட்டு சட்டவிரோதமாக கனடா செல்ல முயன்ற பத்து இலங்கையர்கள் புதுடில்லி விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய குடிவரவு, குடியகல்வு துறை அதிகாரிகளை ஏமாற்றி இலங்கையர்களை புதுடில்லி விமானநிலையத்தின் ஊடாக கனடாவிற்கு அனுப்ப முயன்ற முகவர்களுடன் தொடர்பு வைத்திருந்த பத்து இலங்கையர்கள் புதுடில்லியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் சென்னையில் வசிக்கும் இலங்கையை சேர்ந்த முகவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் அடையாளங்களை உறுதி செய்வதற்கான ஆவணங்களை கையளிக்குமாறு கேட்டோம் ஆனால் அவர்களால் அவற்றை காண்பிக்க முடியவில்லை,இதன் பின்னர் சந்தேகம் காரணமாக மேலதிக விசாரணைகளிற்காக அவர்களை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவந்தோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனைவரும் இந்திய குடிவரவு, குடியகல்வு துறையை ஏமாற்றி கனடாவிற்கு செல்ல முயன்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# மாட்டிறைச்சி உட்கொள்வதை தவிருங்கள்

## சுகாதார திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

வடமேல் மாகாணத்தில் கால்நடைகள் மத்தியில் வைரஸ் வேகமாக பரவி வருவதால் வடமேல் மாகாணத்தில் இருந்து பெறப்படும் மாட்டிறைச்சியை உட்கொள்வதை தவிர்க்குமாறு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதனால் வடமேல் மாகாணத்தில் இருந்து கால்நடைகளை ஏற்றிச் செல்வது கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நிறுத்தப்பட்டது.

குருணாகல் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு பரவும் வைரஸ் தொற்று காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வட மேல் மாகாணத்தில் உள்ள 46 கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுகளில் 34 பிரிவுகள் உள்ள கால்நடைகளுக்கு இந்நோய் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# இறைச்சி மீன் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் கோழி இறைச்சி, மீன் மற்றும் முட்டை ஆகியவற்றின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

1000 முதல் 1100 ரூபாய் வரை இருந்த கோழி இறைச்சியின் விலை திடீரென 1500 முதல் 1600 ரூபாய் வரை உயர்ந்துள்ளதுடன் சந்தையில் மீன் விலையும் அதிகரித்துள்ளது.

இதேவேளை, முட்டைக்கான விலையை அரசாங்கம் நிர்ணயம் செய்த போதிலும், இன்னும் 53 ரூபா தொடக்கம் 55 ரூபாவிற்கு இடைப்பட்ட விலையிலேயே முட்டை விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர். (நி)

# மரக்கறிகளின் விலைகள் பாரியளவில் அதிகரிப்பு

## தம்புள்ள மொத்த வியாபாரிகள் தெரிவிப்பு

(தம்புள்ள)

கடந்த வாரத்தை விட, நேற்று முன்தினம் காய்கறிகளின் மொத்த விலை 40 சதவீதம் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தம்புள்ளை மொத்த சந்தைக்கு வழங்கப்படும் அனைத்து மரக்கறிகளின் மொத்த விலையும் அதிகரித்துள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

பச்சை மிளகாய், கறி மிளகாய், பீன்ஸ் மற்றும் லீக்ஸ் ஆகியவற்றின் விலைகள் சுமார் 50% அதிகரித்துள்ளன.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையினால் பயிர்கள் சேதம் அடைந்ததன் காரணமாக மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாகவும் தம்புள்ள விசேட பொருளாதார வர்த்தக நிலைய சங்கத் தலைவர் ஏகநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம்,மலையகம், வடமேற்கு, மற்றும் ஊவா பிரதேசங்களில் இருந்து பெறப்படும் அனைத்து வகையான மரக்கறி வகைகளின் மொத்த விலைகளும் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (நி)

# ஆறுமுகம் தொண்டமானின் நினைவாக நினைவு முத்திரை முதல் நாள் கடித உறை வெளியீடு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமானின் நினைவாக விசேட நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் கடித உறை என்பன ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வெளியிடப்பட்டன.



ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சரான பந்துல குணவர்தனவினால் நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் கடித உறை என்பன ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் ஆறுமுகன் தொண்டமானின் மனைவி ராஜலக்ஷ்மி தொண்டமான் ஆகியோருக்கு நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் கடித உறை என்பன வழங்கப்பட்டன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஜராத்தை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை
# 5 ஆவது தடவையாக சுவீகரித்தது சென்னை



கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஐ.பி.எல் இறுதிப்போட்டியில் டோனி தலைமையிலான சென்னை சுப்பர்கிங்ஸ் 5 ஆவது தடவையாக சம்பியன்பட்டம் வென்றது.

அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் குஜராத் டைட்டன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகளுக்கு இடையில் பலப்பரீட்சை நடந்தன். டாஸ் வென்ற டோனி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன் படி குஜ ராத் அணி முதலில் பட்டிங் செய்தது. தொடக்க வீரர்களாக சகாவும ஷுப்மன் கில்லும் பந்துகளை பவுண்டரிகளாகவிளாசி சென்னை அணி பந்து வீச்சாளர்க்ளை திணறடித்தனர்.



ஜடேஜா வீசிய பந்தை ஷுப்மன் கில் இறங்கி விளையாட முயன்ற போது, பந்து நேராக டோனிக்கு கிடைக்க, அவர் மின்னல் வேகத்தில் ஸ்டம்பிங் செய்து விக்கெட்டினை வீழ்த்தி னார்.

அவரைத் தொடர்ந்து விர்திமான் சகா- சாய் சுதர்சன் ஜோடியும் சிஎஸ்கே பந்து வீச்சாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தது. இருவரும் அரை சதம் கடந்து முன்னேறினர்.

தொடர்ந்து அதிரடி காட்டிய சாய் சுதர்சன் 96 ரன்களில் அவுட் ஆனார். 20 ஓவர் முடி வில் குஜராத் அணி 4 விக்கெட் இழப்பிற்கு 214 ரன்கள் குவித்தது. ஹர்திக் பாண்ட்யா 21 ரன்களுடன் களத்தில் இருந்தார். பந்துவீச்சில் பதீரனா 2, தீபக் சாகர், ரவீந்திர ஜடேஜா தலா ஒரு விக்கெட் எடுத்தனர். இதை யடுத்து 215 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை அணி களமிறங்கியது.

தொடக்க வீரர்களாக ருது ராஜ் மற்றும் கான்வே களமிறங்கினர், ருதுராஜ் 4 ரன்கள் எடுத்த நிலையில், அங்கு மழை திடீரென குறுக்கிட்டதால் ஆட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

சென்னை அணி பட்டிங் செய்ய தொடங்கிய நிலையில், இறுதிப்போட்டி முழுமையாக முடியுமா அல்லது போட்டி ரத்து செய்யப்படுமா என்ற குழப்பத்தில் ரசிகர்கள் இருந்தனர்.

பின்னர், மழை நின்றதை அடுத்து சரியாக நேற்று முன் தினம் நள்ளிரவு 12.10 மணியளவில் பவர் பிளே ஆப் முறைப்படி 15 ஓவர்களாக குறைக்கப்பட்டது. குஜராத் அணி 20 ஓவர்களில் 214 ரன்கள் அடித்த நிலையில், சென்னை அணிக்கு 15 ஓவர்களுக்கு 171 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.




முதலில் களமிறங்கிய ருதுராஜ் 26 ரன்களும் கான்வே 47 ரன்களும் எடுத்து ஆட்டமிழக்க ரஹானே 27 ரன்களும் ராயுடு 19 ரன்க ளும் எடுத்தனர். ராயுடு ஆட்டமிழந்ததை அடுத்து, களமிறங்கிய டோனி 149 ரன்கள் எடுத்திருந்த நிலையில் டோனி ரன் எடுக்காமல் அவுட்டானார்.

ஜடேஜா, துபே 12 பந்துகளில் 21 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை அணிவிளையாடியது.

துபே 32 ரன்களும் ஜடேஜா 15 ரன்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருக்க 15 ஓவர் முடிவில் 5 விக்கெட்டு இழப்பிற்கு 171 ரன்கள் எடுத்து சென்னை அணி அபார வெற்றி பெற்றது. (4-6)

உ
சிவமயம்
ஓம் முருகா

## சைவமும் தமிழும் சகத்தென்றும் நிலைத்திருக்கும்



மயிலுறை வாழ்வே விநாயக மலையுறை வேலா மகீதர
வனசர ராதார மாகிய ...... பெருமாளே.
அருணகிரிநாதர் திருப்புகழ் 365

செந்தமிழ் கடவுளாக கருதப்பெறும் முருகனுக்கு , அவன் வழிபாட்டுக்கு உகந்த நாள் **வைகாசி விசாகத் திருநாளாகும்** சைவமும் தமிழும் தழைத்தோங்க இத் திருநாளில் முருகனை உள்ளன்போடு பிரார்த்தனை செய்து துதிப்போம்.

சுத்தி நின்றி பாதகம் செய்ய பல்வேறு முயற்சிகள் செயற்பாடுகள் நடைபெறும் இத் தருணத்தில், ஆண்டவனை அடைக்கலமாவதை தவிர வேறு வழியில்லை

சரவண ஜாதா நமோநம கருணைய தீதா நமோநம
சததள பாதா நமோநம ...... அபிராம

தருணக தீரா நமோநம நிருபமர் வீரா நமோநம
சமதள வூரா நமோநம ...... ஜகதீச

பரம சொரூபா நமோநம சுரர்பதி பூபா நமோநம
புரிமள நீபா நமோநம ...... உமைகாளி

புகவதி பாலா நமோநம இகபர மூலா நமோநம
பவுருஷ சீலா நமோநம ...... **அருள்தாராய்**

இரவியு மாகாச பூமியும் விரவிய தூளேற வானவ
ரெவுர்களு மீடேற ஏழ்கடல் ...... முறையோவென்

றிடர்பட மாமேரு பூதர மிடிபட வேதா னிசாசர
ரிகல்கெட மாவேக நீடயில் ...... விடுவோனே

மரகத ஆகார ஆயனு மிரணிய ஆகார வேதனும்
வசுவெனு மாகார ஈசனு ...... மடிபேண

சரவண மடுவில் தோன்றியவனே வணங்குகிறேன்; தாமரை போன்ற திருவடிகளை உடையவனே வணங்குகிறேன்; **உனது சிறந்த திருவடியை நீ எனக்கு இனியேனும் வந்து அருள் வாயாக;** அழகிய இளமை விளங்கும் கதிர்ஒளியை உடையவேன! வணங்குகின்றேன்; ஒப்பிலா வீரனே, அரசனே! போர் வீரனே! தமிழ் சைவ சிவபூமி வாழ்வீரனே! உன்னை வணங்குகின்றேன். **பேர்க்கள ஊரா போரூரா** வணங்குகின்றேன்.

பரம் பொருட் சொரூபனே! உன்னை வணங்குகின்றேன், இந்திரனுக்கு அரசனே! உன்னை வணங்குகின்றேன். கடப்பமலர் அணிந்தவனே! வணங்குகின்றேன்.

உமை, காளி, பகவதி எனப்படும் பார்வதியின் குமரனே! உன்னை வணங்குகின்றேன். இம்மைக்கும் மறுமைக்கும் மூலகாரணனே! வணங்குகின்றேன். அருள்புரிவாயாக!. அசுரர்களின் வலிமைகெட மிக்க வேகமுள்ள நெடுவேலைச் செலுத்தின வேலவனே! ஓம் முருகா.

மரகதம் போன்ற உருவம் உள்ள ஆயன் திருமாலும், பொன் உருவம் உள்ள பிரமனும் திருவடியை விரும்பிப் போற்ற மயிலில் வீற்றிருக்கும் வாழ்வே விநாயகமலையில் வீற்றிருக்கும் வேலனே! பூமியைத் தாங்கு பவனே! கதிர்காமத்திலும், மலையிலும் சிவபூமியில், வாழ்பவர்களாகிய, வனத்தில் சஞ்சரிப்பவர்களா கிய வேடர்களுக்குப் பற்று கேடாக விளங்கும் பெருமாளே!

திருநெறிய தமிழிசையை ஓதுவோம். திருப்புகழ் ஓதுவோம் சைவமும் தமிழும் சகத்தினில் நிலைத்திருக்க வேல் பிடித்து நின்றவனின் கால்பிடித்து தொழுவோம். கரம்பிடித்து உயர்த்துவான் கதிர்காமக் கந்தன்.



ஓம் முருகா
**க.கு.க சிவபாலன் (K.K.K)**

(C-6649)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிக்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

தென்னாபிரிக்காவை முன்னுதாரணமாகக் கொண்டு, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நாட்டில் ஸ்தாபிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு, நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற போதே அமைச்சரவைப் பேச்சாளரான பந்துல குணவர்தன இதனை தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவின் சர்வதேச தொடர்புகள் மற்றும் ஒத்துழைப்பு அமைச்சரின் அழைப்பின் பேரில் அந்நாட்டின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான ஆரம்பக் கற்கைகளை மேற்கொள்ள நீதி அமைச்சர் மற்றும் வெளி விவகார அமைச்சர் அந்நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி, சர்வதேச தொடர்புகள் மற்றும் ஒத்துழைப்பு அமைச்சர் உள்ளிட்ட அந்நாட்டின் பிரதானிகளுடன் விசேட கலந்துரையாடல்களிலும் இவர்கள் ஈடுபட்டனர்.

அதற்கமைய, நாட்டிலும் உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையை ஸ்தாபிக்க நீதி அமைச்சர் மற்றும் வெளி விவகார அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி)

# பொது நினைவுத்தூபி அமைக்கும் எண்ணப்பாடு அடிப்படையில் சரியானது - மனோ

(கொழும்பு)

மரணித்தவர்களை நினைவுகூருவதற்காக பொது நினைவுத் தூபி அமைக்கும் எண்ணப்பாடு அடிப்படையிலே சரியான ஒன்று என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிங்கள-தமிழ் மக்களிற்கு பொது நினைவுத்தூபி அமைத்தல் தொடர்பாக அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.

இது தொடர்பாக உங்கள் கருத்து யாது? என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

மரணித்தவர்களை நினைவுகூருவதற்காக பொதுத் தூபி அமைக்கும் எண்ணப்பாடு அடிப்படையிலே சரியான ஒன்றே.

ஆனால் இலங்கை வரலாற்றில் கொல்லப்பட்டவர்களுக்கும் கொன்றவர்ளும் வெவ்வேறாக அடையாளம் காணப்படுகின்றது.

பொதுவாக அனைவருக்குமான நினைவுத் தூபியினை நிர்மாணித்து அதனை மரணித்தவர்களிற்காக அனைவரும் நினைவு கூரும் ஒன்றாக கருதும் நிலையில் நாடு இல்லை. அதனை முற்போக்காக நான் கருதுகின்றேன். அது முழுமையானதல்ல.

கொல்லப்பட்டவர்களில் அப்பாவி மக்கள், போராளிகள் மற்றும் இராணுவ வீரர்கள் என பலர் உள்ளனர்.

இவர்கள் ஒவ் வொருவரிற்கும் ஒவ்வொரு காரணங்களால் மரணம் ஏற்பட்டுள்ளது.

போராளிகளும் இராணுவ வீரர்களும் போர் செய்வதற்கும் வீர மரணம்



அடைவதற்கும் என்றுமே போராடினார்கள்.

ஆனால் அப்பாவி பொது மக்கள் அவற்றிற்கிடையில் சிக்கி கொல்லப்பட்டனர்.

இவ்வாறாக மரணங்களில் வேறு வேறு காரணங்கள் இருப்பினும் அவர்கள் அடிப்படையில் மரணித்துள்ளனர்.

இவற்றினை மனதிலே கொண்டு பரந்த சிந்தனையுடன் முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்தார். (நி)

# கடும் வெப்பநிலை காரணமாக கண்கள் பாதிக்கப்படும் அபாயம்

## சுகாதாரத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில்தற்போது நிலவும்கடும் வெப்பமான காலநிலை மற்றும் கடுமையான சூரிய ஒளியால் கண்கள் மற்றும் சிறு நீரகங்கள் பாதிக்கப்படுவதால், மக்களை கவனமாக இருக்குமாறு சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

அதிக சூரிய ஒளியுடன் உடலில் தீங்கு விளைவிக்கும் கதிர்கள் விழுவதால் கண்கள் பாதிப்புக்குள்ளாகும் அபாயம் உள்ளதாகவும் சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி)

# எரிவாயுவிற்கான நாளாந்த கேள்வி அதிகரிப்பு

## லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு


(கொழும்பு)

எரிவாயுவிற்கான நாளாந்த கேள்வி அதிகரித்துள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி தினசரி எரிவாயு விநியோகம் 30 ஆயிரத்தில் இருந்து 40 ஆயிரம் சிலிண்டர்கள் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், எரிவாயு விநியோகத்தை அதிகரிக்க சப்புகஸ்கந்த மாபிம பிரதேசத்தில் புதிய எரிவாயு முனையம் ஒன்று உருவாக்கப்படவுள்ளதாகவும் லிட்ரோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (நி)

# 1 பில்லியன் டொலர் கடனை நீடிக்க இந்தியாவுடன் இலங்கை ஒப்பந்தம்



(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இந்தியா வழங்கிய 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவியை ஒரு வருட காலத்திற்கு நீடிப்பதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை நேற்று கைச்சாத்திட்டுள்ளது.

இந்திய ஸ்டேட் வங்கியின் அதிகாரிகளின் பங்கேற்புடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

முன்னதாக இதற்கான ஆரம்ப ஒப்பந்தம் 2023 மார்ச்சில் கைச்சாத்திடப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியா வழங்கிய 1 பில்லியன் டொலர் கடனில் இருந்து இந்த ஆண்டு மார்ச் மாதம் வரையில் 576.75 மில்லியன் அமெரிக்க டொலர்களை மட்டுமே இலங்கை பயன்படுத்தியுள்ளது.

எஞ்சியுள்ள 423.25 மில்லியன் அமெரிக்க டொலர்களை மேலும் ஒரு வருடத்திற்கு பயன்படுத்த இலங்கைக்கு அனுமதி வழங்குவதே இந்த உடன்படிக்கை என செஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி)

# இராசிபலன்

31.05.2023
வைகாசி 17, புதன்கிழமை
ஏகாதசி முற்பகல் 11.53 மணிவரை
சித்திரை பின்னிரவு 5.25 மணிவரை

சுபநேரம் -4.22-5.52 மணிவரை
இராகுகாலம்-11.52-1.22 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்-உத்திரட்டாதி

வளவன்

**மேஷம்** — எதிர்ப்புகள் கூட சாதகமாகிவிடும், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**ரிஷபம்** — பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மிதுனம்** — நினைத்த காரியம் நிறைவேறும் நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கடகம்** — உறவினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** — சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், பொன்னான நாள்.

**கன்னி** — பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**துலாம்** — வழக்கமான பணிகளில் மாற்றம் ஏற்படலாம், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள், காரிய வெற்றிக்கு கண்ணனை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** — பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தினர் உங்களைப் புரிந்து கொண்டு நடப்பர்.

**தனுசு** — பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உறவினர் உங்கள் மனம் போல நடந்து கொள்வர், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**மகரம்** — மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பகையொன்று நட்பாகலாம், பயணங்கள் கைகூடும்.

**கும்பம்** — பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம்.

**மீனம்** — குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களை தடுக்க

# இன்று முதல் விசேட வேலைத்திட்டம்

## யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

**வீதி விபத்துகளைத் தடுக்க யாழ்.மாவட்டத்தில் இன்று முதல் விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார்.**

யாழ். குடா நாட்டில் அதிகரித்துள்ள வீதி விபத்துகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண குடாநாட்டில் மே மாதம் மாத்திரம் 10 இற்கும் மேற்பட்ட வீதி விபத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதோடு வீதி விபத்துகளில் 10 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில் விசேட நடவடிக்கை ஒன்று இன்று முதல் முன்னெடுக்கப்படவுள்ளது.

போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோரை உரிய சட்ட நடவடிக்கைக்குட்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

அத்தோடு வீதி விபத்துக்கள் ஏற்படக்கூடியவாறு மஞ்சள் கடவைக்கு அண்மையில் வாகனங்களை நிறுத்துதல், போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்துதல், வேகமாக வாகனங்களை செலுத்துதல், தலைக்கவசம் இன்றி வாகனம் செலுத்துதல் போன்ற பல்வேறுபட்ட போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்தோடு யாழ்.மாவட்டத்தில் 80 வீதமானவர்கள் போக்குவரத்து விதிமுறைகளை மீறியே தமது வழமையான செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள்.

குறிப்பாக தலைக்கவசம் அணியாது செல்கின்றார்கள், வேகமாக பயணிக்கின்றார்கள், நகரப்புறங்களிலும் வேகமாக வாகனங்களை செலுத்துகின்றார்கள், வீதிகளில் விபத்துக்களை ஏற்படுத்தக் கூடியவாறு வாகனங்களை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

காங்கேசன்துறை வீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதி பகுதியில் வீதி விபத்துகள் ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளதால் அந்த பகுதிகள் விசேட பொலிஸ் அணியினரால் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே பொதுமக்கள் இந்த விடயத்திற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். அத்தோடு பொதுமக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது போக்குவரத்து விதிமுறைகளை கடைப்பிடித்து செயற்படுவதன் மூலம் வீதி விபத்துகளில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.(4-6-33)

# பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நாளை 1 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது அன்றைய தினம் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையும் 5.30 மணிக்கு கொடியேற்றமும் இடம்பெறும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பமாகும் நவநாள் வழிபாடுகள் தினமும் 5.30 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து திருப்பலி. இடம்பெறும்.

நற்கருணை விழா 12 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் திருப்பலி அதிகாலை 5.15 மணிக்கும் புனிதரின் பெருவிழா திருப்பலி காலை 6.30 மணிக்கும் இடம்பெறும்.

புனிதரின் திருச்சுரூப தேர்ப்பவனி அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும் என பாஷையூர் பங்குத் தந்தை ஜெறோ செல்வநாயகம் அறிவித்துள்ளார். (நி- 6)



யாழ்ப்பாணம் - இருபாலை தென்கோவை கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 13 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் 14 ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

(படம்:- சிவசாந்தன்)

# வேலணையில் இடம்பெற்ற பாரம்பரிய உணவுத் திருவிழா



(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச செயலகத்தினரின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினரால் "பாரம்பரிய உணவுத்திருவிழா" வானது வேலணை பிரதேச செயலாளர் சிவகரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பயனாளிகள் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தினர்கள்.

இவ்விழாவில் பலதரப்பட்ட பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் உள்ளூரில் பாரம்பரிய முறையில் உற்பத்தி செய்யப்பட்ட உணவு பொருட்களும் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டதுடன் விற்பனையும் செய்யப்பட்டது.

இதில் பொதுமக்களும் அரச அலுவலகர்களும் கலந்து கொண்டு முயற்சியாளர்களை ஊக்குவித்ததுடன் அவர்களால் விற்பனை செய்யப்பட்ட உற்பத்திப்பொருட்களை கொள்வனவு செய்தனர். (4-6)

# இலங்கை மாணவர்களுக்காக இந்திய புலமைப்பரிசில்கள் அறிவிப்பு

(கொழும்பு)

BIMSTEC புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2023-24 கல்வியாண்டில் இந்தியாவிலுள்ள நாலந்தா பல்கலைக்கழகத்தில் கீழ்வரும் கற்கைநெறிகளைத் தொடர்வதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வரலாற்று கற்கைகளில் MA மற்றும் PhD பௌத்த கற்கைகள், தத்துவம் மற்றும் மத ஒப்பீட்டு கற்கைகளில் MA மற்றும் PhD, இந்து கற்கைகளில் (சனாதன தர்மம்) MA மற்றும் PhD, சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் கற்கைகளில் MSc மற்றும் PhD, நிலைபேண்தகு அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தில் MBA, உலக இலக்கியம் (ஆங்கிலம்) MA மற்றும் PhD ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்புலமைப்பரிசில் திட்டமானது அனுமதிக் கட்டணம், இக்கற்கை நெறிக்கான கல்விக் கட்டணம், வதிவிட செலவுகள் மற்றும் மாதாந்த கொடுப்பனவு ஆகியவற்றுடன் ஒரு தடவைக்கான இருவழி பயணக் கொடுப்பனவையும் உள்ளடக்கியுள்ளது.

இத்திட்டம் குறித்த மேலதிக தகவல்களை https://nalandauniv.edu.in/admissions/ என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது foreignstudents@nalandauniv.edu.in. என்ற இ-மெயில்முகவரி மூலமாகவும் பெறமுடியும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 2023 ஜூன் 10 ஆம் திகதிக்கு முன்னதாக (https://nalandauniv.edu.in/admissions/) இணையத்தளம் ஊடாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (4)

# திடீரென வீழ்ச்சியடைந்த இலங்கை ரூபா

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்பில் மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்படி, நேற்று முன்தினத்துடன் ஒப்பிடும்போது டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி நேற்று திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த மூன்று வாரங்களாக மீண்டும் உயர்வை நோக்கி நகர்வதுடன் கடந்த இரு நாட்களில் அதிவேக வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

எனினும் நேற்று அமெரிக்க டொலர், யூரோ, பிரித்தானிய பவுண்ட் உள்ளிட்ட பல வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக ரூபாவின் பெறுமதி சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்றைய நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 303.95 ரூபாவாகவும் கொள்வனவு விலை 290.67 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி)



கிளிநொச்சி நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு அதிகாரிகள் சகிதம் கண்காணிப்பு விஜயத்தினை நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டார்.

குறித்த பகுதியில் பொருத்தமான இடங்களை தெரிவு செய்து வர்த்தக நிலையங்களை அமைத்து, கடந்த காலங்களில் வாழ்வாதாரத்திற்காக கிளிநொச்சி பேருந்து தரிப்பிடத்தினை அண்டிய பகுதியில் வியாபார நிலையங்களை அமைத்திருந்தவர்களுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

(படம்:- மகாலிங்கம்)

# கழிவுத் தொட்டிகளைக் கூட விட்டு வைக்காத திருடர்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கொடிகாமம் ஐயனார் கோவில் சந்திப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த தரம் பிரிக்கும் குப்பைத் தொட்டிகளை கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு இனந்தெரியாத நபர்கள் தூக்கிச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் முகமாக சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் வை.ஜெகதாஸால் சபை நிதி ஒதுக்கீடு மூலம் வைக்கப்பட்ட கழிவுத் தொட்டிகளே இவ்வாறு களவாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் பெயர்ப் பட்டியல் பதிவுகள் எதிர்வரும் 16 ஆம் திகதியுடன் பூர்த்தி

(கொழும்பு)

கிராம சேவையாளர்களுக்காக நிலவும் வெற்றிடம் காரணமாகவே, இந்த வருடத்திற்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலை வீடுகளுக்கு விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலை பதிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பணிகள் எதிர்வரும் 16 ஆம் திகதியுடன் பூர்த்தி செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

## சமூக ஊடகங்கள் மூலம்

# இனங்களுக்கிடையில் பதற்றத்தை ஏற்படுத்த சதி- பந்துல

(கொழும்பு)

சமூக ஊடகங்கள் மூலம் இனங்களுக்கு இடையில் பதற்றத்தை ஏற்படுத்த பல்வேறு குழுக்கள் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தேசிய பாதுகாப்புச் சபைக்கு அண்மையில் தெரிவிக்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் பேசிய அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் இருந்து அரசாங்கம் பாடம் கற்றுக் கொண்டுள்ளது.

ஆகவே இவ்வாறான செயற்பாடுகளுக்குத் தீர்வு காண தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும்.

மேலும் அப்பாவி மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு நிகழ்வுக்கும் அல்லது சம்பவத்திற்கும் அரசாங்கம் இடமளிக்காது என்றும் குறிப்பிட்டார். (நி)


## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 09 (பழைய வட்டாரம்-16) கஸ்தூரியார் வீதி, ஆதன இல 464 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் நடராஜா பெண் கமலாதேவி என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு கந்தையா இராமலிங்கம் கைம்பெண். செல்லமுத்து அவர்கள் 31.08.1957 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.அருளம்பலம் முகதாவில் 625 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு கந்தையா இராமலிங்கம் நடராசா பெண் கமலாதேவிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கை, இல.19 கந்தையா இராமலிங்கம் அவர்கள் 09.07.1981 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சண்முகநாதன் முகதாவில் 570 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி இல.192, சரவணமுத்து நடராசா மகள் கமலாதேவிக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், வேலணை மேற்கு, வேலணை, தற்பொழுது யாழ்பாணம், கஸ்தூரியார் வீதி இல. 192, கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கமும் பெண் கமலாதேவியும் ஆகிய அவர்கள் 05.04.1994 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி. ச. இளங்கோவன் முகதாவில் 3540 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி இல.192, இராசையா தங்கராஜா கைம்பெண் கமலாதேவிக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி இல.192, இராசையா தங்கராஜா கைம்பெண் கமலாதேவி அவர்கள் 05.04.1994 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி. ச.இளங்கோவன் முகதாவில் 3541 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், வேலணை மேற்கு, வேலணை சதாசிவம் திருநாவுக்கரசு பெண் புட்கலைக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், வேலணை மேற்கு, வேலணை. சதாசிவம் திருநாவுக்கரசு பெண் புட்கலை அவர்கள் 15.11.2005 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ச.நல்லநாதன் முகதாவில் 1008 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் அவ்வூரைச் சேர்ந்த சீவரெத்தினம் மகேந்திரனும் பெண் சுசிலாவுக்கும் வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை கல்வராஜன்புலம் நிலப்பரப்பு 2 குளி 6. இது நிலஅளவையாளர் வி.என். தேவராசா 1994 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 03 ஆம் திகதி அளந்து விபரித்த 1145 இலக்க படத்தின்படி 1 ஆம், 2 ஆம் துண்டுகள் நிலப்பரப்பு 3 குளி 00.48 உம் வீடுகளும் கிணறும். இதில் 2 ஆம் துண்டாக காட்டப்பட்ட நிலப்பரப்பு 1 ஒன்று குளி 3.15 மூன்று தசம் ஒன்று ஐந்தும் கிணற்றில் அரைவாசியும் இதற்கு எல்லை.

கிழக்கு :- மிகுதி ஆதனமாகிய 1 ஆம் துண்டு.

வடக்கு :- குழந்தைவேலு சிவப்பிரகாசத்தின் ஆதனம்.

மேற்கு :-கஸ்தூரியார் வீதி.

தெற்கு :- மிகுதி ஆதனமாகிய 1 ஆம் துண்டு இதனடங்கலும்.

தற்போது சீவரெத்தினம் மகேந்திரனும் பெண் சுசிலாவும் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சீவரெத்தினம் மகேந்திரனும் பெண் சுசிலா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத் தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.** (சி-6646)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்- 10 (பழைய வட்டாரம்-21) அராலி வீதி, ஆதன இலக்கங்கள் 32,34 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை பத்மநாதன் இராஜேஸ்வரி அவர்கள் 25.07.2012 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எஸ்.கங்காதரன் முகதாவில் 11654 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் நெற்பரப்பு 14 குளி 1.83 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை முப்பது வருட அசைவற்ற, இடையூறற்ற ஆட்சியென வெளிப்படுத்தி வெளிப்படுத்தல் உறுதி நிறைவேற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தை பத்மநாதன் இராஜேஸ்வரி அவர்கள் 25.07.2012 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எஸ்.கங்காதரன் முகதாவில் 11655 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நெற்பரப்பு 14 குளி 1.83 விஸ்தீரண ஆதனத்தை தனது மகனான பத்மநாதன் சிறிராம்குமாரிற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணபகுதி வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை "துரும்பாகுலம் கரைவயல்" நெற்பரப்பு 14 குளி 1.83, இதனெல்லைகள்.

கிழக்கு :- எஸ்.தர்மராஜாவுக்கும், கே.இராசநாயகத்திற்கும் உரிய ஆதனம்.

வடக்கு :- P.சுமதியினதும் மறுபேரினதும் ஆதனம்.

மேற்கு :-ஒழுங்கை.

தெற்கு :- அராலி வீதி.

தற்போது பத்மநாதன் சிறிராம்குமார் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும். உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பத்மநாதன் சிறிராம்குமார் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.** (சி-6645)

## கல்யாண மாலை
### (சர்வதேச இலவச திருமண சேவை)

## அறிவித்தல்

**அன்பார்ந்த பொது மக்களுக்கு!**

யாழ்ப்பாணம் இலக்கம் 144, பிறவுண் வீதியிலுள்ள கல்யாண மாலை என்பது சமூக சேவை நோக்குடன் இயங்கும் சர்வதேச இலவச திருமண சேவை அமைப்பாகும்.

இங்கு நிலைய நிர்வாகச் செலவுகளின் பொருட்டு பதிவுக் கட்டணம் மட்டுமே அறவிடப்படுகின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் நிலைய நிர்வாகச் செலவு, காகிதாதிகள், தொலைபேசி மற்றும் மின் கட்டணங்கள் அதிகரித்து இருப்பதன் காரணமாக எதிர்வரும் **01.06.2023** இலிருந்து பதிவுக் கட்டணம் நான்காயிரம் ரூபாவாக **(4,000/=)** அறவிடப்படும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**நிர்வாகம்**
**கல்யாண மாலை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 146

### அரச சபையில் அமைச்சரான திருடன்

ஒரு ஊரில் ஒரு திருடன் இருந்தான். அவன் தினமும் திருடப் போவதற்கு முன்னர், கோவில் மண்டபத்தில் தினமும் ஒரு சாமியார் சொற்பொழிவு ஆற்றி வந்தார். சில நேரங்களில் அங்கிருக்கும் கூட்டம் சிரிப்பதைக் கேட்டு நாமும் சாமியார் சொல்லும் 'ஜோக்'கைக் கேட்போமே என்று போவான். ஒரு நாள் அவனுக்கு ஞானோதயம் ஏற்பட்டது. பகற்பொழுதில் அந்த சாமியார் இருக்கும் குடிலுக்குச் சென்று, "குருவே..! வணக்கம் எனக்கு ஒரு மந்திரம் சொல்லித் தாருங்களேன்.." "மகனே!நீ யார்..?"அவன் கூசாமல் உண்மையைச் சொன்னான்: "நான் ஒரு பக்காத் திருடன். பத்து வயது முதல் திருட்டுத் தொழில்தான் செய்து வருகிறேன்.."

நீ உண்மை பேசுவதால் உனது உள்ளத்தில் ஏதோ சில நல்ல அம்சங்கள் இருப்பதை உணர்கிறேன். இன்றுவேதத்திலுள்ள முதலாவது மந்திரத்தை உனக்குப் போதிக்கிறேன். அதைப் பின்பற்றினால் அந்த மந்திரம் பலித்து சில அற்புதங்களைச் செய்யும்..முதல் மந்திரம் "சத்தியம் வத" - அதாவது உண்மையே பேசு" "சாமி, இது ரொம்ப எளிதான மந்திரம். பின்பற்றுவதும் எளிது. கைகள் தானே திருட்டுத் தொழில் செய்யும் வாய் உண்மையைப் பேசுவது ஒன்றும் கடினமில்லையே எனக் கூற சாமியார் புன்னகை பூத்தார்.

மந்திர உபதேசம் இருப்பதால், பெரிய இடத்தில் கை வைத்து பெரிய சாதனை புரிய வேண்டும் ஏன்று எண்ணி, அரண்மனை யில் திருடப் போனான். கும்மிருட்டில், அரண்மனை மதிலைச் சுற்றி வருகையில், அந்நாட்டு மன்னரும் கையில் விளக்குடன் மாறு வேடத்தில் வந்தார். மாறுவேடத்தில் வந்த ராஜா நில், யார் நீ எனக் கேட்க ஐயா, நான் பக்காத் திருடன் எனக் கூற, அட,நானும் பாக்தாத் திருடன் தான். அசலூரிலிருந்து வந்திருக்கிறேன். எனக்கும் பணம் வேண்டும். உன்னுடன் வரட்டுமா? பங்கில் பாதி கொடுத்தால் போதும்.

ராஜாவுக்கு அவரது அரண்மனை வழி எல்லாம் அத்துபடி என்பதால் திருடனை நேரே கஜானாவுக்கு அழைத்துச் சென்றார்.

இருவரும் ஒரு பெரிய பெட்டியைத் திறந்தனர். அதில் மூன்று விலையுயர்ந்த பெரிய மாணிக்கக் கற்கள்இருந்தன.திருடன்- இன்று நமக்கு அதிர்ஷ்ட நாள். நான் உனக்கு பாதி தருவதாக ஒப்புக் கொண்டேன். இப்பொழுது இந்த மூன்றாவது இரத்தினக் கல்லை நான் எடுத்தாலும் நீ எடுத்தாலும் 50-50 வராது. ஒருவருக்குக் கூடுதலாகி விடும். இதை இவ்வளவு காலம் கஜானாவில் வைத்திருக்கும் மன்னன், ஒரு கல்லாவது திருடு போகாமல் இருந்ததே என்று சந்தோஷப்படுவானில்லையா..? என்றான். இருவரும் ஒப்புக் கொண்டு வீடு திரும்பலாம் என்றனர். அந்தத் திருடன் விடை பெற்றுச் சென்ற போதும் அவனுக்குத் தெரியாமல் அவனைப் பின்தொடர்ந்து சென்று அவன் எங்கே வசிக்கிறான் என்பதை குறித்துக் கொண்டார் அரசர். மறுநாள் அரசவை கூடியது.

அரண்மனைக் கஜானாவில் திருட்டு நடந்திருப்பதாக நமது உளவாளிகள் எனக்குத் தகவல் தந்துள்ளனர். நிதி அமைச்சரே என்னவென்று பாருங்கள். இதோ, உடனே சென்று பார்த்து அறிக்கை சமர்ப்பிப்பேன் என்றார். அவர் கஜானாவுக்குச் சென்று பார்த்ததில் திருடன் ஒரு மாணிக்கக் கல்லை மட்டும் விட்டுச் சென்றிருப்பதைக் கண்டார். திடீரென அவருக்குப் பேராசை வரவே, அதை இடுப்பு வேட்டியில் முடிந்து வைத்துக் கொண்டார். அரசவைக்கு ஓடோடி வந்தார். நிதியமைச்சர்- மன்னரே, நமது உளவாளிகள் மிகவும் திறமைசாலிகள். ராஜ விசுவாசிகள். அவர்கள் சொன்னது சரியே. கஜானாவில் உள்ள ஒரு பெட்டி உடைக்கப்பட்டு, மூன்று மாணிக்கக் கற்கள் திருடப்பட்டிருக்கின்றன. ராஜா- அப்படியா? ஒரு கல்லைக் கூட அவர்கள் விட்டுச் செல்லவில் லையா? நிதியமைச்சர்- மன்னவா, திருடர்கள் என்ன முட்டாள் களா..? ஒரு கல்லை நமக்கு விட்டுச் செல்ல. இருப்பதையெல்லாம் சுருட்டுவது தானே அவர்கள் தொழில். ராஜா "யார்அங்கே..?" காவலர்கள் ஓடி வந்து, முன் நிற்க, "இதோ, இந்த முகவரியிலுள்ள திருடனை உடனே பிடித்து வாருங்கள். ஆனால் அவனை ஒன்றும் செய்து விடாதீர்கள்.."

விரைந்து சென்ற காவலர், அந்த திருடனைப் பிடித்து வந்து, அரசன் முன்னர் நிறுத்தினர். திருடன்-நானும், இன்னொரு வனும் உங்கள் அரண்மனை கஜானாவுக்குள் நுழைந்து பெட்டியை உடைத்தோம். அதில் மூன்று மாணிக்கக்கற்கள் இருந்தன. நான் ஒன்றை எடுத்துக் கொண்டு, என்னுடன் வந்த மற்றொருவனுக்கு ஒன்றைக் கொடுத்தேன். மூன்றாவது மாணிக்கக்கல்லை உங்களு க்கே இருக்கட்டும் என்று வைத்து விட்டேன். நான் தன் மாறுவேடத்தில் வந்து உன்னுடன் கஜானாவில் நுழைந்தேன்.அமைச்சரே. மூன்றாவது கல்லை வையுங்கள்.

மன்னவா..! என்ன அபவாதம் இது? இன்னும் ஒரு நிமிடத்தில் அந்த மாணிக்கக்கல்லை சமர்ப்பிக்கவில்லையானால், உமது வேட்டியை உருவி சோதன்ன செய்ய உத்தரவு இடுவேன். என்னை மன்னித்து விடுங்கள். பேராசை என் கண்களை மறைத்து விட்டது. நான் தான் திருடினேன் இதோ அந்தக் கல்வேட்டியின் முடிச்சிலிருந்து எடுத்து வைத்தார். இந்த நிதியமைச்சரை சிறையில் தள்ளுங்கள். இன்று முதல் நமது நாட்டின் நிதியமைச்சராக இந்தத் திருடனை நியமிக்கிறேன். உங்கள் அனைவரையும் விட உண்மையுடனும் ராஜ விசுவாசத்து டனும் இருந்தமைக்காக இவனே இப்பொறுப்புக்கு தகுதியுடையவன்.

மறுநாள், சாமியாரைச் சந்தித்து நடந்ததைக் கூற "எனைத் தானும் நல்லவை கேட்க" என்று வள்ளுவன் சொன்னான். நீயும் அதையே கேட்டு இந்நிலைக்கு உயர்ந்தாய்.

### ஜப்பான், தென்கொரிய கடற்பகுதிகளில் பதற்றம்

*ஐ.நாவின் தடையை மீறி*

# செயற்கைக்கோளை விண்ணில் ஏவ

# வடகொரியா முடிவு

### சுட்டு வீழ்த்துமாறு ஜப்பான் உத்தரவு

(பியாங்யாங்)

**நீண்டதூர ஏவுகணைத் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வடகொரியாவுக்கு ஐ.நா பாதுகாப்புச் சபை தடை விதித்து உள்ளது. எனினும், தடையை மீறி செயற்கைக்கோளை விண்ணில் ஏவ வடகொரியா முடிவு செய்துள்ளது.**



கடந்த ஆண்டு தொடங்கிய தில் இருந்து வடகொரியா கிட்டத்தட்ட 100 ஏவுகணை களைச் சோதனை செய்து இருக்கிறது. இந்த சோதனை கள் தென்கொரியா மற்றும் ஜப்பான் கடற்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத் தியது.

ஐ.நா தடையை மீறி ஏவு கணை தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது, தங்கள் நாட்டுக்கு அச்சுறுத்தல் விடுக் கும் செயல் என்று ஜப்பான் தெரிவித்துள்ளது.

தென் கொரியாவுடன் இணைந்து அமெரிக்கா மேற் கொண்டு வரும் தொடர்ச்சி யான பொறுப்பற்ற இரா ணுவ பயிற்சிகளுக்கு இது போன்ற வசதிகள் மிகவும் அவசியமான ஒன்று என்று வடகொரியா தெரிவித்துள் ளது.

ஜூன் 11 ஆம் திகதிக்குள் செயற்கைக்கோள் விண் ணில் ஏவப்படும் என வடகொ ரியா தெரிவித்து இருக்கிறது. இது குறித்து ஜப்பான் அரசு க்கு வடகொரியா அனுப்பிய செய்திக் குறிப்பில், இராணுவ உளவு முயற்சியின் அங்க மாக முதன் முறையாக செயற் கைக்கோள் ஒன்றை ஏவு கணை தொழில்நுட்பத்தில் அனுப்ப இருப்பதாக தெரி வித்து இருந்தது.

அத்துடன் இது மஞ்சள் கடல், கிழக்கு சீன கடல் மற் றும் பிலிப்பைன்ஸின் கிழக்கு பகுதியில் உள்ள லூசோன் தீவுகளில் கடல்நீரைப் பாதி க்கச் செய்யலாம் என்றும் வட கொரியா அதில் தெரிவித்து இருந்தது.

ஜப்பான் எல்லைக்குள் வடகொரிய ஏவுகணை நுழை ந்தால், அதனை உடனடியாக சுட்டு வீழ்த்த இராணுவத் துக்கு உத்தரவிட்டுள்ளதாக ஜப்பான் நாட்டு பாதுகாப்பு துறை அமைச்சர் யசுகாசு ஹமடா உத்தரவிட்டுள்ள தாக தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் புதிய செயற்கைக்கோள் ஏவும் நட வடிக்கை ஜப்பான், தென் கொரிய கடற் பகுதிகளில் பதற்றத்தை ஏற்படுத்தி உள் ளது. (நி)

# ஏலத்தில் விடப்படும் ஹிட்லரின் பென்சில்

(அயர்லாந்து)

அடோல்ப் ஹிட்லருக்குச் சொந்தமானது எனக் கூறப் படும் பென்சில் ஏலத்தில் விடப்படவுள்ளது.

குறித்த பென்சிலானது 80,000 பவுண்ட் வரையி லான தொகைக்கு ஏலத்தில் விற்கப்படலாம் என எதிர்பார் க்கப்படுகிறது.

இது அடுத்த மாதமளவில் வடஅயர்லந்தில் உள்ள பெல்பாஸ்ட் நகரில் ஏலம் விடப்படவுள்ளது.

1941 ஆம் ஆண்டு இந் தப் பென்சிலை ஹிட்லருக்கு 52 ஆவது பிறந்தநாள் பரி சாக அவரின் நீண்ட நாள் காதலி எவா பிரான் கொடுத்தார் எனக் கூறப்படு கிறது.

அதில், "எவா" என்று ஜேர்மானிய மொழியிலும் "AH" என்ற எழுத்துகளும் உள்ளமை குறிப்பிடத்தக் கது.

குறித்த பென்சிலை 2002 ஆம் ஆண்டு ஒருவர் ஏலத் தில் வாங்கினார். இது மீண் டும் ஜூன் 6 ஆம் திகதி நடை பெறவுள்ள ஏலத்தில் மீண் டும் விற்கப்படவுள்ளது.

இதேவேளை, அதனுடன் கையெழுத்திடப்பட்ட ஹிட்ல ரின் படம், விக்டோரியா அரசியார் வழங்கிய கையால் எழுதப்பட்ட மன்னிப்பு ஆவ ணம் ஆகியவையும் ஏலம் விடப்படும் என சர்வதேச செய்திகள் தெரிவித்துள் ளன. (நி)

# ரஷ்யக் கப்பல் மீது உக்ரைன் தாக்குதல்

(மொஸ்கோ)

ரஷ்யக் கப்பலை உக்ரை னின் ஆளில்லா விமானங் கள் தாக்கியுள்ளன.

கருங்கடலில் பயணம் செய்து கொண்டிருந்த நிலை யிலேயே குறித்த கப்பல் தாக்கப்பட்டுள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் தெரிவிக்கி ன்றன.

குறித்த தாக்குதல் சம்ப வத்தை வன்மையாகக் கண் டிப்பதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள் ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னணி நிறுவனங்களின் வர்த்தக நாமங்கள் முறைகேடாக பயன்படுத்தப்படுவதாக முறைப்பாடு

(கொழும்பு)

முன்னணி நிறுவனங்களின் வர்த்தக நாமங்களை முறைகேடாக பயன்படுத்தி வெளிநாடுகளில் இருந்து போலி யான பொருட்களை இறக்குமதி செய்யும் வர்த்தகம் ஒன்று இடம் பெற்று வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பலசரக்கு பொருட்கள், சொக்லட், பிஸ்கட் உள்ளிட்ட மேலும் சில உற்பத்திகள் நாட்டிற்கு சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்படுவதாக முன்னணி நிறுவனங்கள் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு முறைப்பாடு செய்துள்ளன.

இதன் காரணமாக தங்களது நிறுவனத்திற்கும் அபகீர்த்தி ஏற்படுவது மாத்திர மின்றி நுகர்வோரும் பாதிப்புக்குள்ளாவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கமைய, குறித்த வர்த் தகத்தில் ஈடுபடுபவர்கள் மற்றும் உற்பத்திகள் தொடர்பில் விசேட ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (நி)

# தனது சிறப்புரிமைகள் மீறப்படுவதாக அமைச்சர் காஞ்சன குற்றச்சாட்டு

(கொழும்பு)

சில இணையத்தளங்களில் வெளியிடப்பட்ட செய்திகளில் தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் இதனை பாரா ளுமன்ற சிறப்புரிமைகள் குழு வின் ஊடாக விசாரணை நடத்துமாறு சபாநாயகருக்கு கடிதமொன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்க பதிவொன்றிலேயே குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன் உண்மைக்கு புறம்பான தனிப்பட்ட செய்திகளை வெளியிடும் ஊடக நிறுவனங்களை பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவிற்கு அழைக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த 24 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கள் ஊடகங்களில் பெரிதும் பயன்படுத்தப் பட்டது.



இந்த நிலையில் அவரது சிறப்புரிமைகள் பாரியளவில் மீறப்பட்டுள்ள்தாகவும் அமைச்சர் சபாநாயகருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 280 | 300 | 320 | 450 |
| தக்காளி | 350 | 350 | 320 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 220 | 180 | 250 |
| கோவா | 450 | 400 | 450 | 480 |
| கரட் | 260 | 380 | 400 | 480 |
| பூசணி | 100 | 100 | 80 | 100 |
| புடோல் | 140 | 200 | 150 | 300 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 380 | 380 | 350 | 380 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 140 |
| பாகற்காய் | 400 | 500 | 500 | 500 |
| வெண்டக்காய் | 140 | 160 | 120 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 380 | 350 | 300 | 300 |
| லீக்ஸ் | 360 | 360 | 400 | 500 |
| பீற்றூட் | 400 | 400 | 320 | 500 |
| கறிமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 800 | 1000 |
| போஞ்சி | 550 | 500 | 550 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 250 | 350 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 150 | 120 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 550 | 600 | 400 | 600 |
| முள்ளங்கி | 120 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | 140 | 200 | --- |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2840

சுவேதா




ஆகாஸ்




தூயா




லூட்சா




சிவதர்சன்




தக்சி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மேல்நீதிமன்றினால்

# இரட்டைக்கொலை குற்றவாளிக்கு மரணதண்டனைத் தீர்ப்பு!

(குருமன்காடு)

**வவுனியா சமளங்குளம் பகுதியில் 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வீடொன்றினுள் புகுந்து இருவரை கொலை செய்து கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய நபருக்கு வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.**

வவுனியா சமளங்குளத்தில் 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி வீடொன்றினுள் புகுந்து அங்கிருந்த இருவரை சுட்டுக்கொலை செய்து கொள்ளையில் ஈடுபட்ட 24 வயது நபரொருவருக் கெதிராக 11 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்நிலையில் நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் தற்போது 38 வயதாகும் குறித்த நபருக்கு நேற்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனால் 9 குற்றச்சாட்டுகளுக்கு 16 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டதுடன் 10000 ரூபா தண்டப் பணமும் விதிக்கப்பட்டது.

தண்டப் பணம் செலுத்த தவறும் பட்சத்தில் இரண்டு மாதம் கடூழிய சிறைத்தண்டனையும் வழங்கிய நீதிபதி 10 ஆம் மற்றும் 11 ஆம் குற்றச்சாட்டுகளுக்கு மரண தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார். (4-6-250)

# வவுனியாவில் உறவுகள் நேற்றுப் போராட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவினர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன் பாக இடம்பெற்ற இப் போராட்டத்தில் சர்வதேசமே எமக்கான நீதியைப்பெற்றுத்தா என்ற தொனிப் பொருளில் போராட் டத்தினை முன் னெடுத்திருந்தனர்.

போராட்டத்தின் போது குடும்பங்களாக சரண டையும் போது அவர்க ளுடன் சேர்ந்து சரண டைந்த 29 க்கும் மேற்பட்ட குழந்தைகள்எங்கே?, புதிய பயங்கரவாதத் தடைச் சட்ட த்தை உடன் நிறுத்து, புதிய புதிய சட்டங்களை இயக்கி மக்களின் குரல் களை நசுக் காதே போன்ற பல்வேறு பாதாகைகளை தாங்கிய வாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (4-299)

# புதுக்குடியிருப்பில் குளத்தினை ஆக்கிரமிக்கும் தனிநபர்

## மக்கள் போராட்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் உடையார்கட்டு கமநலசேவைத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குளமாக காணப்படும் வெள்ளப்பள்ளம் குளம் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக குளமாக காணப்பட்டுள்ளது.

இந்த குளம் இருப்பதால் அருகில் உள்ள மக்களுக்கான குடிதண்ணீர், கால்நடைகளுக்கான மேய்ச்சல் மற்றும் தண்ணீர், மீன்பிடித் தொழில், மேட்டு நில பயிர்செய்கை என மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த குளத்தின் கீழ் விவசாய செய்கை காணப்படாத நிலையில் அருகில் சில காணிகளில் நெல் விதைப்பினை காலபோகத்தில் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இவ்வாறு காணப்படும் குளத்தினை தனிநபர் ஒருவர் அபகரித்து எல்லை கற்கள் போட்டு வேலி அடைத்து வைத்துள்ளதால் தனிநபரின் அபகரிப்பிற்கு உள்ளாகியுள்ள குளத்தை மீட்க கிராம மக்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

நேற்று முன்தினம் வெள்ளப்பள்ளம் குளப்பகுதியில் மக்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளார்கள். இதன்போது 100 வரையான மக்கள் பங்கெடுத்துள்ளார்கள். பதாகைகளை தாங்கியவாறு எதிர்ப்பில் ஈடுபட்டு குளத்தினை தனிநபர் ஆக்கிரமிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள். தொடர்ந்து அங்கு நாட்டப்பட்ட தூண்களை மக்கள் அகற்றியுள்ளார்கள்.

இதனை தொடர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு சென்ற மக்கள் அங்கு பிரதேச செயலகம் முன்பாக எதிர்ப்பினை வெளிப்படுத்தி மனுவினை பிரதேச செயலாளரிடம் கையளித்துள்ளார்கள்.

இதன்போது குறித்த குளம் தொடர்பில் பிரதேச செயலாளர் மக்களுக்கு தமது நிலைப்பாட்டினை தெரிவித்துள்ளார். குள ஆக்கிரமிப்பு தொடர்பில் மேலதிகாரிகளிடம் தெரியப்படுத்தி மேலும் ஆராயவுள்ளோம். முதல் ஆரம்ப கட்ட நடவடிக்கையின் படி குளம் அமைந்துள்ள காணி தனியார் காணியாக காணப்படுகின்றது. குளத்தினை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு விவாசாய திணைக்களத்திடம் இருக்கின்றது. மேலதிகமாக என்ன செய்யலாம் என்பது தொடர்பில் அரசாங்க அதிபருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (4-6)

# சிறுபோக விவசாயிகளுக்கு உரமானிய வவுச்சர் வழங்கல்



(தருமபுரம்)

அரசாங்கத்தினால் 2023 ஆம் ஆண்டு சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் மானியமாக உரத்தைப் பெறும் நோக்கில் வவுச்சர் வழங்கும் செயற்பாட்டை முன்னெடுத்திருக்கிறது.

இதன் அடிப்படையில் நேற்று கிளிநொச்சி மாவட்டத்திற்கான வவுச்சர் வழங்கும் செயற்பாட்டை ஆரம்பிக்கும் நிகழ்வு கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தில் இடம் பெற்றது. குறித்த வவுச்சர்களை கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் பா.தேவரதன் ஆரம்பித்து வைத்தார். குறித்த நிகழ்வில் கமக்கார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

2023 சிறுபோக நெற் செய்கைக்காக உரமானிய வவுச்சரை விவசாயிகள் பெறமுடியும். ஒரு ஹெக்டேயருக்கு 20000ரூபா குறித்த வவுச்சரை கொண்டு விவசாயிகள் சேதன,அசேதன பசளையை கமநல சேவை நிலையம் மற்றும் தனியார் கடைகளில் பெற்றுக்கொள்ள முடியும். (4-6-316)

# போக்குவரத்து வசதி இன்மையால் வவுனியா சின்னத்தம்பனை, மடுக்குளம் மாணவர்களின் கல்வி பாதிப்பு

(கண்டாவளை)

வவுனியா சின்னத்தம்பனை மற்றும் மடுக்குளம் ஆகிய பகுதிகளை சேர்ந்த 58 க்கும் மேற்பட்ட மாணவர்கள் சீரான போக்குவரத்து வசதிகள் இன்றி பெரும் சிரமங்களுக்கு மத்தியில் ஆறு கிலோமீற்றர் சென்று தமது கல்வியை கற்க வேண்டிய நிலை காணப்படுவதாக பெற்றோர்கள் மற்றும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா சின்னத்தம்பனை வேலங்குளம், மடுங்குளம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த சுமார் 58க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து வசதிகள் இன்மையால் அன்றாடம் பெரும்சிரமங்ககளை எதிர் நோக்கி வருகின்றனர்.

குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் சுமார் 6 கிலோமீற்றர் தூரம் வரையான பகுதியாக உள்ள காட்டு வழியாக சென்று தமது கல்வியை தொடர்வதாக மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

அதாவது குறித்த பிரதேசத்தில் இருந்து காலை வேளைகளில் மாணவர்கள் பாடசாலை செல்லுகின்ற போது காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டி வருவதாகவும் இந்த விடயம் தொடர்பில் உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-315)

# வவுனியாவில் மாணவன் மீது கம்பி, பொல்லுகளால் தாக்குதல்

(நெளுக்குளம்)

வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் மாணவன் மீது இரும்புக்கம்பி, பொல்லுகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் படுகாயமடைந்த குறித்த மாணவன் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், நேற்று முன்தினம் மாலை குறித்த மாணவன் பள்ளிவாசலில் தொழுகையினை முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது அங்கு வந்த இளைஞர் குறித்த மாணவன் மீது இரும்பு மற்றும் பொல்லுகளால் சரமாரியாக தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

தாக்குதலில் படுகாயமடைந்த மாணவன் மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சு.சுகைர் அகமட் என்ற 18 வயதான மாணவனே காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்க்காப்புக்கான நோயெதிர்ப்பு சக்தியின் அவசியம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம் இனிய உறவுகளே!**

அவசரமாக வந்திருக்கும் செய்தியொன்றுடன் உங்களைச் சந்திக்கின்றேன். இவ்வாண்டு பல நாடுகள் பஞ்சம் பட்டினியில் சுருண்டு போகுமளவிற்கு உணவுற்பத்தியும் விலையும் அதனது வழுங்கலும் காணப்படுவதாக அவதானிகள் கணித்திருக்கின்றார்கள்.

இந்த முக்கிய காரணிகளின் தளம்பல் நிச்சயமாக எமக்கு பாதிப்பைத் தரப்போகின்றது. உலக உணவு தாபனம் தொடர்ச்சியாகவே இந்த எச்சரிக்கையை இவ்வாண்டு பல வழிகளில் மக்களுக்கு தெரிவித்துக் கொண்டேயிருக்கின்றது.

இதுவொரு நல்ல நடைமுறையல்ல. மக்களின் உணவுத்தேவையை குறிப்பாக ஊட்டச்சத்து தேவையை நம்பியே பல குடும்பங்கள் இருக்கின்றன. வாழ்வாதாரத்தின் அடிப்படைத் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத இக்கட்டான நிலையிலிருக்கும் குடும்பங்களுக்கு அவசர நிவாரண உதவியும் தேவைப்படுகின்றது.

உணவினூடாக உள்ளெடுக்க வேண்டிய ஊட்டச்சத்துக்கள் அவசியமாக ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளிலொன்றாகும். சமனான உணவென்பது இங்கே உடலின் வளர்ச்சிக்கும் உறுப்புகளின் இயக்கத்திற்கும் அவசியம் தேவைப்படுகின்ற காரணத்தினால் எமக்கான உணவினைத் தேர்ந்தெடுப்பதும் அதனை தேவையானளவு உட்கொள்கின்ற பழக்கத்தைக் கடைப்பிடிப்பதும் அவசியமானதாகும்.

உலக உணவுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டு தகவலின் படி 2019 ஆம் ஆண்டில் 15 சவீதமான உடல் நிறை குறைவான சிசுக்கள் காணப்பட்டமையை காணலாம். உணவின் விலையேற்றம் மேலும் சமனான ஊட்டச்சத்தான உணவை உட்கொள்வதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

நோயெதிர்ப்பு சக்திக்கான ஊட்டச்சத்துக்கள் குறிப்பாக விற்றமின்கள் மற்றும் இலைக்கறி வகைகளில் கிடைக்கும் அன்றி ஒட்சிசன்கள் தினமும் உண்ணும் உணவுடன் உள்ளெடுக்கப்படும் போது அவற்றின் தன்மையினால் இயற்கையாகவே உடலில் நோயெதிர்ப்பு சக்தி மேலோங்கும். இதற்கு எமது உணவுப் பழக்கவழக்கமே முக்கிய காரணமாக அமைகின்றது.

உணவில் சேர்க்கப்படும் பச்சை இலைக்கறி வகைகள் முக்கிய மூலக்கூறுகளாகும். குறிப்பாக விற்றமின் ஏ,பீ அதிலும் பீ6,சீ மற்றும் ஈ போன்றவையின் தேவையும் அவற்றை விட எமது உடலில் சுற்றியோடும் குருதியின் உற்பத்திக்கு தேவையான அனைத்து கனிமங்களும் உடலில் செறிந்திருக்க வேண்டும்.

சாதாரணமாக உணவில் உள்ளெடுக்கப்படும் ஊட்டச் சத்துக்கள் அகத்துறிஞ்சப்பட்டு அவற்றின் மூலம் உடலியக்க தொழிற்பாடுகள் சீர்செய்யப்படுகின்றது. இதற்கான அவசியமான ஊட்டச்சத்துக்கள் முழுமையாக எமது உடலுக்குள் செல்லாத காரணத்தால் அந்தந்த தொழிற்பாடுகளில் தொய்வு நிலையேற்படுகின்றன.

உணவைத் தெரிந்து அதன் மூலம் உட்கொள்ள முடியாத ஊட்டச் சத்துக்களை குளிகைகளாகவும் ஊசிகளாகவும் உடலில் செலுத்தும் நிலைக்குள் நாம் வந்துவிட்டோம். உடலின் செரிமானத்தைப் பொறுத்து இவ்வாறான குளிகைகளும் மருந்துகளும் எமது உடலுக்குள் அவற்றின் தாக்கங்களை செலுத்துகின்றன.

இருப்பினும் இயற்கை உணவுகளுக்குள் பொதிந்திருக்கும் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை எமது உணவாக உடலுக்கு கொடுக்கும் போது இயற்கையுடனான நோயெதிர்ப்பு சக்தி விரைந்துருவாகும். இதனால் வேகமாகப் பரவும் தொற்று நோய்களை உடலை அணுக முடியாமல் இவை பாதுகாத்துக் கொள்ளும்.

தற்போது நிலவும் அதிகரித்த வெப்பநிலை பல தொற்று நோய்களுக்கான ஏதுவான சூழலை உருவாக்கிவிடுகின்றது. குறிப்பாக பொக்குளிப்பான் குறிப்பிட்ட சில இடங்களில் காணப்படுகின்றது. அதற்கான தடுப்பூசி இளைய வயதில் பெற்றிருந்தாலும் இளவயதில் இந்நோய் வந்திருந்தாலும் மீண்டு அது வராதவாறு உடல் நோயெதிர்ப்பு சக்தியைக் கொண்டிருக்கும் என நம்பும் போது தற்போதும் வயது 50 ஐ தாண்டிய முதியவருக்கும் இந்நோயின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக எமது உடலில் இயக்க சக்தியைப் பொறுத்து நோயெதிர்ப்பு தன்மையும் வேறுபடுகின்றது. அவர்களுக்கு மீண்டும் உருவாகியிருப்பதனை அறிந்து நாமும் அவசியம் கவனமாக இருக்க வேண்டும். டெங்கு நோயின் தாக்கம் மீண்டும் அதிகரித்திருப்பதனையும் நாம் அவசியம் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

இது தவிர கொவிட்டின் மீளுருவாக்கமும் சீன நாட்டிலும் இன்னும் எமது நாட்டிலும் பரவுவதனை நாம் அலட்சியம் செய்யலாகாது. இவற்றின் தாக்கம் எமது அசண்டையீனத்தால் அதிகரிக்கவும் பரவவும் ஏதுவாக இருக்கும்.

மேலும் நாம் காய்ச்சல் வரும் போது அதற்கான காரணத்தைக் கண்டறியாது உடனடியாக பனடோல் மாத்திரைகளை எமது எண்ணப்படி விழுங்குகின்றோம். இவ்வாறான காய்ச்சல் தொடர்ந்து கிழமைக் கணக்கில் காணப்படும் போது எமது உடலை பரீட்சிக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம் என்பதனை அவசியம் கவனத்திற் கொள்ளல் வேண்டும். காய்ச்சல் என்பது உடல் உள்ளிருக்கும் உபாதையை வெளிப்படுத்தும் அறிகுறியாகவே நாம் கொள்ளல் வேண்டும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




நாமாக மாத்திரைகளை பயன்படுத்துவதனைத் தவிர்த்து தகுந்த பரிசோதனைகளை மேற்கொண்டு மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகளை பயன்படுத்துதலை அவசியம் மேற்கொள்ளல் வேண்டும்.

நோயெதிர்ப்பு மாத்திரைகளை (அன்ரிபயோடிக்ஸ் ) தான்தோன்றித்தனமாக உட்கொள்வதனை அவசியம் தவிர்க்க வேண்டும்.

தவறின் அவற்றினாலான பக்கவிளைவுகளும் அவ்வாறான மருந்துகள் பின்னர் செயலற்றுபோகும் நிலையும் ஏற்படும். நோயெதிர்ப்பு மாத்திரைகளை அவசியமின்றி பயன்படுத்துவதற்கெதிராக உலக சுகாதார மையம் பல விழிப்புணர்வு முன்னெடுப்புகளை நடத்திக் கொண்டிருக்கின்றது.

உலகெங்கும் இதுவொரு பிரச்சினையாகவே உருவாகியிருக்கின்றது. எதுவானாலும் உரிய மருத்துவரிடம் கலந்தாலோசித்து இவ்வாறான மருந்துகளை அவர்களின் பரிந்துரைக்கேற்ப பயன்படுத்துதல் அவசியம்.

காய்ச்சல் என பல வகையான நோய்கள் இப்போது எம்மத்தியில் உலா வருவதனால் நாம் இவ்விடயத்தில் மிகுந்த கரிசனை செலுத்த வேண்டும். தவறின் எமதுயிரை அவசியமாக காவுகொடுக்கவும் இது காரணமாகி விடும்.

சந்தைகளில் விற்பனைக்கு இருக்கும் நோயெதிர்ப்பு மாத்திரைகளை வாங்கி பயன்படுத்தும் போதும் அவதானமாக இருக்க வேண்டும். சித்த மருத்துவ குளிகைகள் என பல விளம்பர சொற்களில் கிடைக்கும் மருந்துகளை தவிர்த்து அதற்குரிய சித்த மருத்துவரிடம் கலந்தாலோசித்து வாங்கி பாவிப்பது நன்று.

நோயெதிர்ப்பு எமது உணவின் மூலமாக இயற்கையாக உடலில் உருவாகும் போது தான் அதற்கான பலன் கிடைக்கும். எந்த தொற்று நோயானாலும் எமது உடலில் உள்ள நோயெதிர்ப்பு தன்மை வலுவாக இருந்தால் நாம் அதிலிருந்து எம்மை காப்பாற்றிக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 192





ஆகா! இவருடைய அழகை என்னவென்று சொல்ல! இந்த முதிய பராயத்திலும் இவர் முகத்தில் இப்படிக் கலை வீசுகிறதே! யௌவனப் பிராயத்தில் எப்படி இருந்திருப்பாரோ? இவருடைய புதல்வராகிய சுந்தர சோழர் வனப்பு மிக்கவர் என்று பிரசித்தி பெற்றிருப்பதில் வியப்பு என்ன?

இவரைத் தொடர்ந்து சுந்தர சோழரின் மற்றொரு பத்தினியான சேரமான் மகள் பராந்தகன் தேவி வருகிறார்.

இன்னும் பின்னால், வானுலகிலிருந்து நேரே இறங்கி வந்த தேவ கன்னிகையரையொத்தக் குந்தவைப் பிராட்டி, வானதி, இன்னும் நாம் அரிசிலாற்றங்கரையில் பார்த்த அரச குலப் பெண்கள் வருகிறார்கள்.

விஜயாலயன் காலத்திலிருந்து சோழ வம்சத்தினர் சிவனையும் துர்க்கையையும் குல தெய்வமாகக் கொண்டு வழிபடுகிறவர்கள். ஆனால் திருமாலிடமும் மற்ற சமயங்களிடமும் இவர்களுக்குத் துவேஷம் என்பது கிடையாது. இன்று கண்ணன் பிறந்தநாள் என்பதை முன்னிட்டுப் பெருமாள் கோவிலுக்கு வந்தார்கள் போலும்.

பெரியபிராட்டி செம்பியன் மாதேவி பல்லக்கில் ஏறும் சமயத்தில் ஆழ்வார்க்கடியாருடைய பாடல் அவருடைய காதில் விழுந்தது. அதற்காகவென்றே ஆழ்வார்க்கடியார் உரத்த சத்தம் போட்டுப் பாடினார் போலும். செம்பியன் மாதேவி அவரைத் தம் அருகில் அழைத்து வரச் செய்தார்.

ஆழ்வார்க்கடியார் அடக்க ஒடுக்கத்துடன் வந்து நின்றார்.

"திருமலை! சில நாட்களாக உன்னைக் காணோமே? ஸ்தல யாத்திரை சென்றிருந்தாயோ?" என்று கேட்டார்.

"ஆம், தாயே! ஸ்தல யாத்திரை சென்றிருந்தேன். திருப்பதி, காஞ்சி, வீரநாராயணபுரம் முதலிய பல க்ஷேத்திரங்களைத் தரிசித்தேன். சென்ற இடங்களிலெல்லாம் பல விந்தைகளைக் கண்டும் கேட்டும் வந்தேன்!"

"அரண்மனைக்கு நாளைக்கு வந்து, யாத்திரையில் கண்டு கேட்ட விந்தைகளைச் சொல்லு!"

"இல்லை, அம்மா! இன்றிரவு மறுபடியும் நான் புறப்பட வேண்டும்."

"அப்படியானால் இன்று மாலையே வந்துவிட்டுப் போ!"

"வருகிறேன் தாயே! தங்கள் சித்தம் என் பாக்கியம்!"

பல்லக்குகள், ரதங்கள் எல்லாம் புறப்பட்டு அரண்மனைக்கு விரைந்து சென்றன.

குந்தவைப் பிராட்டி, ஆழ்வார்க்கடியாரைச் சுட்டிக் காட்டி ஏதோ கூற, மற்ற அரசிளங்குமாரிகள் 'கலீர்' என்று சிரித்தார்கள்.

சிரிப்புக்குக் காரணம் கண்டறிய ஆழ்வார்க்கடியார் அந்தப் பக்கத்தை நோக்கினார். குந்தவைப் பிராட்டியின் கண்கள் ஆழ்வார்க்கடியாருடன் ஏதோ சங்கேத பாஷையில் பேசின. ஆழ்வார்க்கடியார் அச்செய்தியை அறிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலை வணங்கினார்.

சோழ மாளிகைகளிலே செம்பியன் மாதேவி வசித்த மாளிகை நடுநாயகமாக இருந்தது. அதன் சபா மண்டபத்தில், பொன்னால் செய்து நவரத்தினங்கள் இழைத்த சிம்மாசனத்தில் அந்தப் பெருமூதாட்டி அமர்ந்திருந்தார்.

காரைக்காலம்மையார், திலகவதியார் முதலான பரமசிவ பக்தைகளின் வழித் தோன்றிய அப்பெண்மணி வெண் பட்டாடை உடுத்தி, விபூதியும், ருத்ராட்ச மாலையும் தரித்து, வேறு எவ்வித ஆபரணங்களும் பூணாமல், அளவற்ற செல்வங்களுக் கிடையில் அஷ்டை சுவரியங்களுக்கு மத்தியில், வைராக்கிய சீலையாக வாழ முடியும் என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தாள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## உயர்ந்த உள்ளம்

(நேற்றைய தொடர்ச்சி...)

விமலன் அந்தக் கவிதையை அக்கு வேறு ஆணிவேறாக பிரித்துத் விமர்சனம் செய்து அனைவரையும் வியக்க வைத்தான்.

முதல் பரிசு பசுபதிக்கே கிடைத்தது. பரிசு பெற்றாலும் அவன் மனதில் விமலன் மீது இருந்த ஆத்திரம் தணியவில்லை. பழிவாங்கும் எண்ணம் அவனை ஆட்டி வைத்தது.

அவன் ஒரு வாளுடன் வீட்டை விட்டு ஓடினான். "விமலனைக் கொன்று விட்டு தான் மற்றவைகளை கவனிப்பேன்' என்று மனதுக்குள் கூறிக் கொண்டே அவன் வீட்டை நோக்கி ஓடினான். யார் கண்களிலும் படாமல் விமலன் வீட்டு பூங்காவில் ஒளிந்து கொண்டான்.



அப்போது விமலன் தன் மனைவியுடன் பேசும் சப்தம் கேட்டது. அவன் மெதுவாக ஜன்னலை அடைந்து வீட்டுக்குள் எட்டிப் பார்த்தான்.

"இன்னிக்கு கவிதைப் போட்டியில் பரிசு கிடைத்தது யாருக்கு?" என்றாள் மனைவி. "வேறு யாருக்கு, நம்ம பசுபதிக்குத் தான்," என்றான் விமலன்.

"பசுபதிக்கு அற்புதமான திறமை இருப்பதாக நீங்களே சொல்கிறீர். பிறகு ஏன் தினமும் அவர் கவிதைகளை விமர்சனம் செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்றாள் மனைவி.

"அடியே! பசுபதி அற்புதமான கவிஞன் தான் அவன் திறமையை மேலும் சிறப்பாக்குவ தற்காகத் தான் அப்படி விமர்சனம் செய்கிறேன். என் விமர்சனத்துக்குப் பயந்து அவன் மேலும் சிறந்த கவிதைகளைப் படைக்க வேண்டும் என்று கடும் முயற்சி செய்து கொண்டிருக்கிறான்.

அந்த முயற்சி அவனுக்கு பெரும் வெற்றியைத் தேடித் தருகிறது. இன்று அவனிடம் போட்டி போட்டு வெற்றி பெறும் தகுதி யாருக்கும் கிடையாது. இப்போது, நான் ஏன் விமர்சனம் செய்கிறேன் என்ற கேள்விக்கு விடை கிடைத்து விட்டதா ?" என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தான்.

வாளுடன் விமலனைக் கொல்ல வந்த பசுபதி இந்த உரையாடலைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தான். இப்பேற்பட்ட உயர்ந்த உள்ளம் கொண்டவரை தான் தவறாக நினைத்துக் கொலை செய்யும் அளவுக்கு வந்து விட்டோடோமே என்று நினைத்த போது அவனுக்கு அழுகையே வந்தது.

அவன் அழுது கொண்டே ஓடிச் சென்று விமலனின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். "அய்யா ! நான் உங்களை தவறாக நினைத்தேன். இந்த உயர்ந்த உள்ளத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று. என்னை மன்னித்து விடுங்கள். இந்தப் பரிசு உங்களை தான் சாரும். அதைப் பெறும் தகுதி எனக்கு இல்லை என்று கூறி அழுதான் பசுபதி.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாதிருக்க முயல்க. உண்மையிருக்க மட்டுமே உழைத்திடுக.

– கோம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்களால் செய்யக்கூடியதை நாங்கள் செய்தோமா?

எல்லாவற்றுக்கும் சிங்களத் தரப்புகளை மட்டும் நாம் குறைகூறுவோமாயின், எங்களின் எதிர்காலம் பாதகமாக அமைவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஆம், எங்களுக்கான உரிமை முக்கியமானதென்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

எங்களுக்கான உரிமை உறுதிப்படுத்தப்படாதபோது, எங்கள் வாழ்வு என்பது எந்நேரமும் ஆபத்து நிறைந்ததாக இருக்கும் என்பதையும் ஏற்றுத்தானாக வேண்டும்.

அதேநேரம் எங்கள் தமிழர் தாயகத்தில் அனைத்து விவகாரங்களும் உரிமைசார் விடயத்துடன் ஒன்றித்தது என்று யார் கூறினாலும் அது ஏற்புடையதல்ல.

உண்மையில் கணிசமான காரியங்கள் தமிழர் தாயகத்திலுள்ள அரச நிர்வாகங்கள் மூலம் செய்யக்கூடியவை.

உதாரணமாக பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள், மாகாண அமைச்சுகள், மாகாணத் திணைக்களங்கள் என்பன தமது பணியைச் செம்மையாகச் செய்யுமாயின், எங்கள் மக்கள் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பிரச்சினைகளில் கணிசமானவை தீர்க்கப்பட்டுவிடும்.

ஆனால் எங்கள் தமிழர் பிரதேசத்தில் இருக்கக்கூடிய அரச திணைக்களங்கள் மக்களுக்கான பணிகளைச் செய்வதில் இருந்து விலகிக் கொள்கின்றன.

இதனால் பொதுமக்கள் அதிலும் குறிப்பாக, சாதாரண மக்கள் மிகப்பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

உதாரணத்துக்குப் பலவற்றை முன்வைக்க முடியும். அதில் குறிப்பாக, பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணக் கொடுப்பனவுகள், தொழில் நட்டங்களுக்கான இழப்பீடுகள், தொழில் முயற்சிகளுக்கான மானியக் கொடுப்பனவுகள் மற்றும் முயற்சியாளர்களுக்கான வங்கிக் கடன்கள், மாணவர்களின் உயர்படிப்புக்கான சலுகைக் கடன்கள் என ஏகப்பட்ட விடயங்கள் பொதுமக்களுக்குத் தெரியாமலே காலாவதியாகிப் போகின்றன.

இதற்குச் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அசமந்தப் போக்கே காரணம் என்பது நிறுதிட்டமான உண்மை.

இதையும் கடந்து, சொந்தமாக அரைப்பரப்புக் காணியேனும் இல்லை என்பதால், வீட்டுத் திட்டத்தை இழந்த குடும்பங்கள் பல.

பிரதேச செயலகங்களின் அதிகாரத்துக்குட்பட்டதாக அரச காணிகள் இருக்கும் போது, சொந்த நிலம் இல்லாததால் வீட்டுத்திட்டத்தை இழக்கின்ற நிலைமை இருக்கிறதெனில் இதற்கும் சிங்களத் தரப்புக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா என்ன?

சரி அரச காணிகளைக் கொடுப்பதில் நிர்வாகச் சிக்கல்கள் உண்டு எனக் கூறி; தத்தம் பதவிகளுக்குரிய அதிகாரங்களை வலுக்குறைக்கின்ற மனநிலையில் நம் அதிகாரிகள் இருக்கலாம்.

அவ்வாறாயின் வெளிநாடுகளில் இருக்கக் கூடிய நம்மவர்களுடன் தொடர்பு கொண்டு; அவர்களுக்குச் சொந்தமான காணிகளில் ஒரு பரப்பை அன்பளிப்பாக வழங்குங்கள். உங்களால் ஓர் ஏழைக் குடும்பம் வாழும் என்று கூறியிருந்தால் கூட, யாரோ ஒருவர் முன்வந்து பூதானம் செய்திருப்பார்.

ஆக, செய்யக்கூடியதுகளைக் கூட செய்யாமல் விடுகின்ற எங்களின் மனநிலை காரணமாகவே எங்கள் பிரதேசத்தில் விபத்து மரணங்கள் மலிந்து கிடக்கின்றன.

என்ன செய்வது இதுபற்றி இவ்விடத்தில் எழுதாத நாளில்லை.

ஆம், எம்மக்களின் நலன்கருதி எங்களால் செய்யக்கூடியவற்றை உச்சமாகச் செய்வோமாயின், அது எங்களுக்கான உரிமையை நாங்களே அடைந்ததாக அமையும்.

# வீதிகளை புனரமைப்பதற்காக 53 மில்லியன் டொலர் கடனுதவி

## அமைச்சர் பந்துல குணவர்தன

இடைநிறுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்திகளை தற்காலிகமாக மீள ஆரம்பிப்பதற்காக 53 மில்லியன் டொலர் கடனுதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய கடன் மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படும் வரை முற்றாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ள வீதிகள் தற்காலிகமாக அபிவிருத்தி செய்யப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வெளிநாட்டுக் கடன்களை மீள செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்துவதாக இலங்கை அறிவித்ததையடுத்து ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்டவற்றின் கடன் உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்பதை நாம் அறிவோம்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் நேரடியாகக் களத்துக்கு அழைத்து செல்லப்பட்டு, அவர்களுக்கு இது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் வரை மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் 53 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

செப்டெம்பரில் கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள முடியும் என்று அரசாங்கம் நம்புகிறது. அவ்வாறு இடம்பெற்றால் அபிவிருத்தி திட்டங்களுக்கான கடன் கிடைக்கும்.

எனவே கடன் மறுசீரமைப்பு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டவுடன் இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் துரிதமாக ஆரம்பிக்கப்படும்.

கடன் மறுசீரமைப்பின் பின்னர் வெளிநாட்டுக் கடன்களை மீள செலுத்துவதற்கான தவணையை நீடித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் அடுத்த வாரமளவில் நிதி அமைச்சு பாராளுமன்றத்துக்கு அறிவிக்கும் என்றார். (ம-7)

## லிட்ரோ விநியோகம் அதிகரிக்கப்பட்டது

(கொழும்பு)

தினசரி எரிவாயு விநியோகம் 10ஆயிரம் சிலிண்டர்களால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எரிவாயுவிற்கான நாளாந்த கேள்வி அதிகரித்துள்ளமையின் காரணமாக இவ்வாறு எரிவாயு விநியோகம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, தினசரி எரிவாயு விநியோகம் 30 ஆயிரத்தில் இருந்து 40 ஆயிரம் சிலிண்டர்கள் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், எரிவாயு விநியோகத்தை அதிகரிக்க சப்புகஸ்கந்த மாபிம பிரதேசத்தில் புதிய எரிவாயு முனையம் ஒன்று உருவாக்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## 24 மணி நேரத்தில் இடம்பெற்ற விபத்தில் ஐவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டின் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் ஐவர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, புத்தளம், அநுராதபுரம், கண்டி ஆகிய மாவட்டங்களில் இந்த விபத்துகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை, மானிப்பாய் சந்திக்கு அருகில் மோட்டார் சைக்கிள் மீது லொறி மோதியதில் 29 வயதான ஓட்டுனர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி - வெலிகண்டல் பகுதியில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து லொறியுடன் மோதியதில் 33 வயதான மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் உயிரிழந்துள்ளார்.

கண்டி - கம்பளை, குருகேலே சந்தியில் பஸ் மோதியதில் 60 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். பஸ்ஸை விட்டு இறங்கி வீதியைக் கடக்க முற்பட்ட வேளை, அவர் விபத்திற்குள்ளாகியுள்ளார்.

புத்தளம் - ஆனமடுவ, பெரியகுளம் பகுதியில் வான் மோதியதில் 68 வயதான பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் - ஸ்வஸ்திபுர பகுதியில் வான் விபத்திற்குள்ளானதில் 76 வயதான பெண் உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் பெண் ஒருவரும் ஆண் ஒருவரும் இரண்டு சிறுவர்களும் காயமடைந்தனர். (ம-7)

## மண்டைதீவு திடு திடுக்கையில் இன்று சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு தெற்கு திடு திடுக்கை ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான கும்பாபிஷேகதின அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் இன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரையான சுபவேளையில் வைரவப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் இடம்பெற்று விசேட பூஜைகளும் நடைபெறும். தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் இடம்பெறும். (ம)

## உயர்தர பெறுபேறு ஓகஸ்ட் வெளியிடப்படும்

க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

விடைத்தாள் மதிப்பீடு தற்போது வெற்றிகரமாக இடம்பெற்று வருவதாகவும் விஞ்ஞான பாடங்களின் விடைத்தாள் மதிப்பீடு ஜூன் மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

விடைத்தாள்களை மதிப்பிடுவதற்கு வழங்கப்படும் கொடுப்பனவை அதிகரிக்குமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், அனுமதி கிடைத்த பின்னர் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார். (ம-7)

## கச்சா எண்ணெய் விலையில் வீழ்ச்சி

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ளது.

அமெரிக்காவின் கடன் எல்லை குறித்த சர்ச்சை தீர்ந்தமை இதற்கு பிரதான காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, பிரண்ட் கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 75.71 டொலராகவும், வெஸ்ட் டெக்சாஸ் இன்டர்மீடியட் பீப்பாய் ஒன்றின் விலை 71.48 டொலராகவும் குறைந்துள்ளது.

இதற்கமைய, கச்சா எண்ணெய் விலை சுமார் 2% குறைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- II

21

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்,
தவிசாளர், எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இலங்கை கடற்பரப்பில் வைத்து தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவதும் பின்னர் இந்திய அரசின் அழுத்தம் காரணமாக அவர்கள் விடுதலை செய்யப்படுவதும் வழக்கமாகி விட்டது.இந்த றோளர் படகின் உரிமையாளர்கள் தமிழக அமைச்சர்கள் அரசியல்வாதிகள் செல்வாக்கு மிக்க முதலாளிகள் என்பதால் அரசியல் செல்வாக்கினால் அவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். விடுதலை செய்யப்பட்ட மறுநாளே மீண்டும் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடிக்கத் தொடங்கி விடுகிறார்கள்.

தமிழகத்தை சேர்ந்த. றோளர் படகுகள் இலங்கை கடற்பரப்பில் பிரவேசிக்கும் போது தனியாக வருவது கிடையாது. இருநூறு முன்னூறு படகுகள் ஒன்றாக வந்து மீன்பிடிப்பதால் அவ்வேளைகளில் இலங்கையில் உள்ள மீனவர்களால் மீன்பிடித் தொழிலை செய்ய முடியாமல் போகின்றது.

இச்சுருக்கு வலை பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்பு பற்றிக் கூறுவதானால், சிறிய மீன்குஞ்சுகள் தொடக்கம் மீன்வளமும் கடல் வளமும் அழிக்கப்படுகிறது.மீன் இனப்பெருக்கத்திற்கு உதவும் பவளப் பாறைகள் அழிக்கப்படுகிறது.வடபகுதி மீனவர்களின் வலைகள் சேதமாக்கப்படுகிறது. வடக்கு கிழக்கு கடற்றொழிலாளர்கள் தொழில் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இந்து சமுத்திரப் பகுதியிலேயே அதிக பவளப் பாறைகளும் மீன் இனப்பெருக்கமும் உள்ள இடமாக மன்னார் வளைகுடா உள்ளடங்கலாக வடபகுதி கடற் பிரதேசமும் பாக்கு நீரிணைப் பகுதியும் காணப்படுகிறது.

இந்தியாவுக்குரிய பாக்கு நீரிணைப் பகுதிக் கடல் பிரதேசத்தில் மீன்வளத்தை அழிக்கும் சுருக்கு வலையைப் பயன்படுத்தி தமிழக மீனவர்கள் மீன்பிடித்து வந்ததால் இப்போது அக்கடல் பிரதேசம் மீன்வளம் இல்லாத பகுதியாக மாறிவிட்டது. இதனால் தான் இப்போது தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் வந்து மீன்பிடிக்கின்றனர்.

பெருந்தொகையான மீன்வளம் இலங்கை மக்கள் யாருக்கும் பயனற்ற முறையில் நாள்தோறும் இந்திய மீனவர்களால் அழிக்கப்படுவதாகவும் இலங்கை கடற்றொழிலாளர்களின் வலைகளையும் நாள்தோறும் இந்திய மீன்பிடிப் படகுகள் அறுத்து நாசம் செய்வதாகவும் இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கிறார். இதனால் இலங்கை கடற்றொழிலாளர்கள் வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்வதோடு இலங்கையின் கடல் வளம் நாசமாக்கப்படுவதாக அவர் தெரிவித்திருக்கிறார். கடல் வளத்தை அழிக்கும் சுரு க்கு வலை அல்லது இரட்டை மடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடி ப்பதற்கு இலங்கை அரசு மட்டுமன்றி இந்திய அரசும் தடை செய்திருக்கிறது.

கடந்த 2013 ஆம் ஆண்டு தமிழக அரசு சுருக்குமடி மற்றும் இரட்டை மடி வலைகளைத் தடை செய்திருந்தது. ஆனால், இந்த வலை மற்றும் அதற்கான பெரிய படகு என சுமார் ஒரு கோடி ரூபாய் வரை இதற்காக முதலீடு செய்திருப்பதாக அரசிடம் முறையிட்டனர். அதனால் மூன்று வருடம் வரை விலக்கு அளிக்கப்பட்டு அந்தக் கால கட்டம் வரையிலும் சுருக்கு மடி, இரட்டை மடி வலையைப் பயன்படுத்திக் கொள்ள அதிகாரபூர்வமற்ற முறையில் அனுமதியும் வழங்கப்பட்டது.

தமிழக அரசின் அறிவித்தலின் படி 2016 ஆம் ஆண்டுக்கு பின் சுருக்குவலையைப் பயன்படுத்தக் கூடாது. ஆனால் இன்று வரை செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகளின் பின்னணியில் சுருக்குவலையைப் பயன்படுத்தி வருகின்றனர். இத்தடையை 2018 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றமும் உறுதிப்படுத்தியது.

தமிழக அரசின் தடை உத்தரவு, சென்னை உயர் நீதிமன்றின் தடை உத்தரவு, இலங்கைக் கடற்படையினரின் கைது நடவடிக்கைகள் அனைத்தையும் மீறி வடபகுதி கடற்கரையின் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வந்து கடல் வளத்தை சூறையாடிச் செல்கின்றனர். இவ்வாறு இணையத்தில் இருந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அண்மையில் (ஜுன் 2022) கூட இத்தடை உத்தரவை இந்திய நீதிமன்றம் மீண்டும் உறுதிப்படுத்தியதை நாங்கள் அறிவோம்.

**இலங்கையில்இழுவைப்படகு மீன்பிடி நடவடிக்கைகளைத் தடை செய்ய வேண்டிதற்கான ஐந்து கார ணங்கள் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் கருத்து**

இயந்திர இழுவைப் படகினைக் கொண்டு கடலுக்கடியில் மீன்பிடிப்பது கடற்பரப்பில் கனமான வலைகளை இழுப்பதன் மூலம் பெருந்தொகைக் கடல்வாழ் உயிரினங்களை பிடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வகை மீன்பிடித்தலுக்கான ஒரு விசேட உரிமத்தை 1996 ஆம் ஆண்டின் மீன்பிடி மற்றும் நீரியல் வளச் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு கூறிய பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், இழுவைப் படகு மீன்பிடி நடவடிக்கைகளைத் தடை செய்வதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து சட்டமாக நிறைவேற்று முன் அவர் அச்சட்டத்திற்காக கூறிய ஐந்து காரணங்கள் இங்கே தரப்படுகின்றன.

**1.இழுவைப்படகு மீன் நடவடிக்கை சூழலை அழிக்கின்றது**

உலக வனஜீவராசிகள் நிதிய கூற்றுப்படி, இழுவைப்படகு மீன்பிடி நடவடிக்கை கடல்வாழ் உயிரினங்களை "மீள திருத்தியமைக்க முடியாதவாறு அழித்தொழிக்கிறது". அழிவடையும் ஆபத்திற்குள்ளாகியிருக்கும் கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் அரிய பவளப்படிவுகள் ஆகியவற்றை கொண்டிருக்கும் நெகிழ்வுத் தன்மை மிக்க சூழலியல் முறைமைகள் ஒரு சில நிமிடங்களில் அழிக்கப்படுகின்றன.

**2. அது ஒரு வீண்விரயம் மிக்க மீன்பிடி முறையாகும்**

வழமையாக இயந்திரப்படகுகள் பிடித்த மீன்களில் 90 வீதமானவற்றை மீண்டும் கடலில் எறிவதனால் இயந்திர இழுவைப் படகு மீன்பிடி நடவடிக்கை விரயம் மிக்கது என்று கடல் பாதுகாப்பு நிறுவகம் கருத்து தெரிவித்துள்ளது. எனவே, இந்த வழக்கத்தைத் தடை செய்வதில் தெளிவான பொருளாதார நன்மைகள் உண்டு. அதன் மூலம் மீன்பிடித் துறையும் இலங்கை பொருளாதாரமும நன்மையடையும். ஏனெனில், நீண்டகால அடிப் படையில் மீன்பிடிக்களம் அதிகம் பேணத்தக்கதாக மாறும்.

**3. இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரங்களுக்கு அது ஊறு விளைவிக்கிறது**

ஒவ்வொரு வாரமும் ஆயிரத்திற்கு மேற்பட்ட இந்திய, இயந்திர இழுவைப் படகுகள் இலங்கைக் கடலில் பாரிய இழுவை வலைகள் கொண்டு மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன். இந்தப் படகுகள் இலங்கை மீனவர்கள் இந்த பகுதிகளுக்குச் சென்று தமது வாழ்வாதாரத் தொழிலில் ஈடுபடுவதைத் தடுக்கின்றன. இந்தியப் படகுகள் இலங்கை மீனவர்களுக்குப் பிடிப்பதற்கு வெகு சிறிது மீன்களையே விட்டு வைத்து மீன் வளங்களை குறைத்த விடுகின்றன.

**4. அது இராஜதந்திர உறவுகளைப் பாதிக்கின்றது**

எல்லை மீறியமைக்காக இந்திய படகு இயக்கியவர்களை இலங்கை அரசாங்கம் கைது செய்தது. இந்தக் கைதுகள் இந்தியாவுடனான இலங்கையின் இராஜதந்திர உறவுகளைப் பாதித்துள்ளன. ஏனெனில், இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு தமக்கு பாரம்பரிய உரிமை உண்டென இந்திய மீனவர்கள் தெரிவிக்கின்றனர். எனினும், இயந்திரப் படகுகளில் கடலடி மீன்பிடி நடவடிக்கையானது ஒரு பாரம்பரிய மீன்பிடி முறைமையல்ல. எனவே முழுமையாக அதனைத் தடை செய்வது "யார் உண்மையான வழக்கப்படி மீன் பிடிக்கிறார்கள்" என்பதிலிருந்து கவனத்தைத் திருப்பி விடும். ஒரு முழுமையான தடை, இந்திய மீனவர்களுக்கு மாத்திரமின்றி இலங்கை மீனவர்களுக்கும் பொருந்துமாகையால், அது நேர்மையானதும் நியாமானதுமாகும்.



Winch இழுவைக் கருவி மூலம் வலையை இழுத்தல்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெப்பமான...

வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் வெப்ப குறியீடு, மனித உடல் உணரும் வெப்ப அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.(ம-7)

## வடமராட்சி...

கனடாவில் நண்பர்களுடன் ஆற்றில் நீராடச் சென்ற வடமராட்சி கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

5 வருடங்களுக்கு முன்னர் புலம்பெயர்ந்து கனடா சென்ற இளைஞன் திங்கட்கிழமை நண்பர்களுடன் ஆற்றில் நீராடச் சென்ற சமயம் குறித்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த உதயகுமார் ஜன்சன் வயது 28 என்ற இளைஞரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தவராவார். (ம-7)

## காட்டு யானை...

யில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வயல் நிலத்தை பாதுகாக்க குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு வயலில் தங்கிவிட்டு நேற்றுக் காலை வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது காட்டு யானையின் பிடியில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் குடாஹலமில்லேவ கிராமத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான டி.ஜயவர்தன (வயது-73) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற மதவாச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299)

## சுதுமலை அம்மன்...

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் 7ஆம் திருவிழாவை சுதுமலை தெற்கு பகுதி மக்களிடம் வழங்குமாறு கோரி நேற்றைய தினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யுகசக்தி சனசமூக நிலையத்தில் இருந்து ஆரம்பித்த குறித்த போராட்டம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் வரை பேரணியாக சென்றது. அதன் பின்னர் ஆலயத்தின் தலைவரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "ஏழாம் திருவிழாவை எம் மக்களுக்கு கொடு, இது தனிக் குடும்பத்தின் திருவிழா அல்ல ஊர் மக்களின் திருவிழா, திருவிழாவை பறித்து எம் மக்களை ஏமாற்றாதே, ஆலய நிர்வாகமே நீதியான பதில் சொல், கிராமம் ஒன்றுபட எமது திருவிழா எமக்கு வேணும்" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7,104)

## பொருளாதார...

துழைப்பை வழங்குமாறு சீனப் பிரதி வெளிவிவகார அமைச்சரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

சீன மக்கள் குடியரசுக்கும் இலங்கைக்கும் இடையிலான 12ஆவது சுற்று இராஜதந்திர ஆலோசனைகளுக்கு இணைத் தலைமை வகிப்பதற்கு இலங்கைக்கு வருகை தந்துள்ள சீனாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் சன் வெய்டாங் உள்ளிட்ட வெளிவிவகார அமைச்சின் தூதுக் குழுவினர் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்தனர்.

இருதரப்பு ரீதியாக நிலவி வரும் உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதோடு, இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும், உற்பத்தித் தொழில் புரட்சியை அடுத்த கட்டத்திற்கு முன்கொண்டு செல்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது கோரிக்கை விடுத்தார்.

சீனப் பொருளாதாரப் புரட்சி தொடர்பான முன்னோடிகளை கருத்திற்கொள்வது போல பிராந்திய அமைதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

பிராந்திய அமைதி மற்றும் நல்லிணக்கம் போலவே ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தும் சர்வதேச உறவுகளை கட்டியெழுப்புவது தொடர்பிலும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் சீன பிரதி வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. (ம-7)

## எதிர்வரும்...

இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உலகின் பல நாடுகளிலும் பொதுப் போக்குவரத்துக்களில் கட்டணம் அறவிடும் முறைமை டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான நாடுகளில் சாரதிகள் மாத்திரமே இருப்பர். பேருந்துகளில் நடத்துநர்கள் இருப்பதில்லை. கியூ. ஆர். அட்டை ஊடான கொடுக்கல் வாங்கலே காணப்படுகிறது.

எனவே நாம் போக்குவரத்து அமைச்சு என்ற ரீதியில் இவ்வாறான முறைமை தொடர்பில் ஆர்வத்தின் வெளிப்பாட்டைக் கோரியுள்ளோம்.

அதற்கமைய இலங்கையில் போக்குவரத்து சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான யோசனைகள் கோரப்பட்டுள்ளன.

இதுவரையில் இதற்காக 12 நிறுவனங்கள் அவற்றின் யோசனைகளை முன்வைத்துள்ளன. இவற்றில் தகுதியான நிறுவனங்களைத் தெரிவு செய்வதற்காக விரைவில் திறைசேரி, நிதி அமைச்சு, மத்திய வங்கி என்பவற்றின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

எனவே எதிர்வரும் 3 மாதங்கள் நிறைவடைவதற்குள் பொதுப் போக்குவரத்து டிஜிட்டல் மயமாக்கப்படும் என்று நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்திருக்கின்றோம்.

அதனை வெளிப்படைதன்மையுடன் முன்னெடுப்பதற்கு எவரேனும் இடமளிக்காவிட்டால், அவ்வாறானவர்கள் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு வெளிப்படுத்தப்படும் என்றார். (ம-7)

## சீனா...

பிரதமர் தினேஸ் குணவர்தனவை நேற்று செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயம், வர்த்தகம் மற்றும் துறைமுக உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்ற பல துறைகளில் இலங்கையில் முதலீடுகளை அதிகரிக்க சீனா செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு சீனா தொடர்ந்தும் ஆதரவைஅளித்து வருகிறது.

பல தரப்பினரின் அழுத்தங்களுக்கு மத்தியிலும் இலங்கை ஒரே கொள்கையை கடைப்பிடிப்பதாக பிரதியமைச்சர் பாராட்டு தெரிவித்தார். சமய உறவுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் இலங்கை பௌத்த சங்கங்களுடன் வலுவான ஒத்துழைப்பை ஏற்படுத்த சீனா நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதமர் தினேஷ்குணவர்தன, பல்வேறு இயற்கை அனர்த்தங்களின்போது சீனா வழங்கிய உதவியை பாராட்டினார். தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட ஆதரவுக்கும் பிரதமர் பாராட்டு தெரிவித்தார். கோவிட் தொற்றுநோய்களின் போது இலங்கைக்கு தடுப்பூசிகள் மற்றும் மருத்துவ உதவிகள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகளை சீனா வழங்கியதையும் பிரதமர் நினைவு கூர்ந்தார்.

சீனாவின் யுனான் மாகாண ஆளுநரின் அண்மைய விஜயத்தைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், இந்தப் பயணத்தின்போது மேற்கொள்ளப்பட்ட பயனுள்ள கலந்துரையாடல்கள் விவசாயத் துறையில் ஒத்துழைப்பை அதிகரிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

மல்வத்துஓயா திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனம் பெறும் பிரதேசங்களில் விவசாயத் திட்டங்களில் சீனா முதலீடு செய்ய முடியும் எனவும், சீனாவிற்கு மரக்கறி மற்றும் பழப் பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 30/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1585
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 4 1 4 1 6 3

தன நிதானய
திகதி - 2023.05.30
சீட்டிழுப்பு இலக்கம் - 1160
C 08 20 28 51
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.05.30
சீட்டிழுப்பு இலக்கம் 3372
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
S 22 52 57 72
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 30/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1478
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
T 08 51 53 52 58

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.30
சீட்டிழுப்பு இலக்கம் 439
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 09 15 22 34 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/05/30
சீட்டிழுப்பு இலக்கம் 5130
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
F 8 6 3 0 4 1
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2104
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.05.30
தினம் செவ்வாய்க்கிழமை
A 30 42 56 59
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,604,080/-
DLB

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.30
வெற்றி வாரம்: 4265
வர்ணம்: பச்சை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 48,120,314.70
வெற்றி இலக்கங்கள்
26 56 61 66 E
707470
92538
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குள் செல்லுபடியாகும்.
DLB

சசிரி
வெற்றி வாரம் 330
சீட்டிழுப்பு திகதி 2023.05.30
ஊதா
வெற்றி இலக்கங்கள்
09 20 21
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,604,480/-
DLB

ராசி அதிர்ஷ்டம்
திகதி 2023-05-30
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,116,016.20
வெற்றி வாரம் 3816
வெற்றி இலக்கங்கள் 34 37 50 51
ரிஷபம்
வர்ணம் சிவப்பு
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,087,560/-
DLB

கப்பருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 10 52 67 70 75
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1280
வர்ணம் வெளிர் பழுப்பு
திகதி 2023.05.30 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 333,959,600.20
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 1930
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2023.05.30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 50,568,026.40
வெற்றி இலக்கங்கள்
05 06 16 65 E
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எவ் பிரதிநிதி இலங்கை விஜயம்
# பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் கலந்துரையாடுவார்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கென்ஜி ஒகாமுரா இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று மே 31ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தனது விஜயத்தின் போது, இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மையில் ஏற்பட்டுள்ள சமீபத்திய மாற்றங்கள் மற்றும் எதிர்காலத்தில் பொருளாதாரத்தை வலுப்படுத் துவதற்கான வாய்ப்புகள் குறித்து பல சுற்று கலந்துரையாடல்களை ஒகமுரா நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் பொருளாதார மீட்சியைத் தடுக்கும் தடைகள் மற்றும் தாமதங்களைக் குறைப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் விவாதங்கள் மேற்கொள்ளப்படும்.

2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள முதல் மறுஆய்வு பணிக்கு முன்னதாக, அண்மையில், சர்வதேச நாணயத்தின் குழு ஒன்று வழக்கமான ஆலோசனைக்காக வந்து திரும்பிய நிலையிலேயே, ஒகாமுராவின் வருகை அறிவிப்பு வெளியாகியுள்ளது.(ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15774)

076 825 7716 (ஆகாஸ்)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 076 559 3322 (15786)


## சுற்றுலா...

கையின் துணை உயர்ஸ்தானிகர் டி. வெங்கடேஷ்வரன் இந்த வாரம் அவரது இல்லத்தில் சந்தித்ததாக இலங்கையின் வெளியுறவு அமைச்சகம் நேற்று தெரிவித்துள்ளது.

சந்திப்பின் போது, துணை உயர்ஸ்தானிகர் ரஜினிகாந்தை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

அவருடைய வருகை சினிமா, சுற்றுலா மற்றும் ஆன்மீக மற்றும் ஆரோக்கிய சுற்றுலாவை மேம்படுத்தும் என்று வெங்கடேஸ்வரன் கூறியுள்ளார்.

இலங்கைக்கான பயணத்தின் போது, பிரத்தியேகமான ராமாயண பாதை மற்றும் இலங்கையில் உள்ள பிற தனித்துவமான பௌத்த தலங்களை ஆராய வேண்டும் என்றும் பிரதி உயர்ஸ்தானிகர் ரஜினிகாந்துக்கு அழைப்பு விடுத்தார்.(ம-7)

## மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கந்தளாய் பகுதியில் மின்னல் தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன் தினம் (29.05.2023) இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அக்போபுர-படுகச்சிய பகுதியைச் சேர்ந்த முகம்மது லத்தீப் முஹம்மது மபாஸ் (36வயது) எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ம-7)


VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

(C-6650)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777



உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-6650)



காணி விற்பனைக்கு

இராசபாதை ரோட்டில் 27 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (சுற்றுமதிலுடன்) (15792)

077 773 0567



இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 31 10 1992

இறப்பு 23 05 2021

அமரர் திருமதி தர்சியா

தர்சி.

இன்றோடு நம் வீட்டில் உன் குரல் கேட்டு இரண்டாண்டுகளாயிற்று!
உன் இரு பிஞ்சுக்குழந்தைகளை தவிக்கவிட்டு சென்றாய்!
பெற்ற தாய் தந்தையரை மறந்து சென்றாய்!
உடன் பிறந்தாரை நினையாமல் போனாய்!
"அம்மா! அம்மா! " என்று உன் பிள்ளைகள் ஏங்கும் போது நாம் என்ன செய்ய...
வருவாய் வருவாய் என்று தானே நம்பிக்கிடந்தோம்......
கடைசிவரை வராமலேயே போய்விட்டாயே!!!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விநாயகர் வீதி,
நல்லூர். (15791)

அழியாத உன் நினைவுகளோடு,
பிள்ளைகள், அம்மா, அப்பா, தம்பி, தங்கை



வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள மேசன், கூலியாள், வெல்டர் மற்றும் பெயின்ரர் தேவை. (15790)

தொடர்புகளுக்கு

070 606 5504
077 944 8109



வாடகைக்கு

அலுமினிய பொடியுடன் கூடிய பட்டா சாரதியுடன் குறைந்த வாடகைக்கு உண்டு. (15781)

075 742 7608



காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 10 பரப்பு காணி விற்பனைக்கு

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- பரப்பு ஒன்றின் விலை 120,000 (ஒரு இலட்சத்து இருபதாயிரம்)

(15793)

076 733 6047
076 755 8606



காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இளவாலையில் 30 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.

- இளவாலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- இளவாலை சந்தியில் இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள்,சுற்றுலா விடுதிகள், வீடுகள்
- அமைக்க உகந்த இடம்.
- பரப்பு ஒன்றின் விலை 800,000 (எட்டு இலட்சம்)

(15793)

076 165 3129
076 911 9371


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.